AHARAM

# அகரம்

தரம் 5 - 11 வரை எண்: 10 எழுத்து: 11 நவம்பர் - 2016 www.aharam.lk

# கானல் நீரும் கற்பனைக் கோட்டையும்

PUBLIC LIBRARY
JAFFNA





## அறிவுத்திறன் மிக்க காகம்

Des: Deltota Harees

50/-

மாதாந்த சிறுவர் சஞ்சிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிவந்துவிட்டது... தெிர்வரும் க.பொ.த. (சாதாரண தர) (G.C.E. O/L)

மாணவர்களுக்கான எதிர்பார்க்கை மாதிரி வினாப் பத்திரங்கள் விடைகளுடன்




Rs. 250.00 Rs. 250.00 Rs. 200.00 Rs. 200.00 Rs. 250.00

பன்னூலாசிரியர் ஏ. எஸ். ஜௌபர் அவர்களின்

2017 ம் ஆண்டுக்கான புதிய நூல்கள்...





மாணவர் வெளியீட்டகம்
STUDENT Publication

108/14 Maligakanda Road, Maradana,
Colombo - 10
225, Dawlagala, Handessa, Kandy.

0115 921892
077 9379292

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06



**பறவை இனங்களிலேயே கூடுதலான அறிவுத்திறன் கொண்ட பறவையாக காகம் கணிப்பிடப்படுகிறது. காகத்தின் அளவிலுள்ள பறவைகளோடு ஒப்பிட்டுப் பார்த்தால் இதனுடைய மூளை பெரிது.**

22



24



42



32



AHARAM
அகரம்

எண்: 10 - நவம்பர் : 2016 - எழுத்து: 11




பிரதம ஆசிரியர்
**டாக்டர் ஆகில் அஹ்மட் ஷரிபுத்தீன்**

**ஆலோசனைக் குழு**

**அஷ்ஷெய்க் ஏ.ஸி. அகார் முஹம்மத் (நளீமி)**
(பிரதிப் பணிப்பாளர், ஜாமிஆ நளீமிய்யா)

**எம்.எச். எம். ஹஸன்** M.Ed
(முன்னாள் பிரதம செயற்றிட்ட அதிகாரி, தேசிய கல்வி நிறுவகம்)

**ஏ.ஆர்.எம். ஜிப்ரி** BEd, MEd

**அன்பு ஜவஹர்ஷா**
(ஓய்வு பெற்ற அதிபர்)

ஆசிரியர்
**எம். றிஸ்வி ஸுபைர்**

துணை ஆசிரியர்
**வ. முஹம்மத் நபீல்**

தளக் கோலம்
**எம்.ஐ.எம். ஹரீஸ்**

## பாடத்திட்டம்

| | |
|---|---|
| தகவல் தொடர்பாடல் | 30 |
| அரபு மொழி | 14 |
| வரலாறு | 20 |




40

**தொடர்புகளுக்கு:**

**அகரம்**
**77, ஸ்ரீ வஜிரஞான மாவத்தை**
**கொழும்பு 00900**
**தொ.பே : 077 741 2561**
**பெக்ஸ் : 011 268 6030**
Web : www.aharam.lk
E.mail : aharamipc@gmail.com

**சந்தா விபரம்**

| | |
|---|---|
| தனிப் பிரதி | : 50/= |
| 1 வருட சந்தா | : 800/= |
| 6 மாத சந்தா | : 400/= |

PUBLIC LIBRARY
JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களுடன் ஆசிரியர்...



# புதிய பார்வைகள், புதிய பாதைகள்

நவீன உலகு நொடிக்கு நொடி தன்னை மாற்றிக் கொண்டிருக்கின்றது. புதிய நவீன சிந்தனைகளும் புதிய கண்டுபிடிப்புக்களும் இந்த உலகில் புதிது புதிதாக உருவாகிக் கொண்டிருக்கின்றன. நேற்று 'அபூர்வம்' என தலைக்கு மேல் உயர்த்திக் கொண்டாடப்பட்ட ஒரு பொருள் இன்று 'பழையது' என மூலையில் ஒதுக்கப்படும் அளவு கற்பனைக்கு அப்பாற்பட்ட வேகத்தில் உலகு மாறிக் கொண்டிருக்கிறது.

இந்த கணப்பொழுதுகள் எம்மை நாம் மாற்றிக் கொள்வது பற்றி ஆழமாகவும் அறிவுபூர்வமாகவும் சிந்தித்து செயலாற்றுவதற்கான சந்தர்ப்பம்!

புதிது புதிதாக சிந்தித்து செயலாற்ற முனைகையில் மூளை தூசு தட்டப்படுகிறது. வாழ்வில் புத்துணர்ச்சி மிளிர்கிறது. ஆனால், புதிய பார்வைகளுக்கும் புதிய பாதைகளுக்கும் எல்லைகளோ, கட்டுப்பாடுகளோ இல்லாவிட்டாலும் சில விதிமுறைகளும் நெறிகளும் இல்லாமலில்லை.

இன்றைய சினிமா புதிய பார்வைகளுக்கு எதிரான மிகப் பெரிய தடைக்கல்லாகும். அளவுக்கு மீறி திரை உலகில் மூழ்கியவர் அறவே புதிதாக சிந்திக்கும் திறனை இழந்து சிந்தனைக் கைதியாகி விடுகிறார். அதேபோல, பாடநூல்களை உணர்ந்து தெளியாமல் வெறுமனே மனனம் செய்வதும் புதிய பார்வைகள் எமக்கு கிடைப்பதற்கு தடையாக அமைந்து விடுகின்றது.

அர்த்தமுள்ள வாசிப்பும் பயனுள்ள பயணங்களும் ஒரு மனிதனுக்கு புதிய பார்வைகளையும் புதிய சிந்தனைகளையும் பரிசளிக்கின்றன. ஒட்டடை பிடித்து தூசு படிந்து கவனிப்பாரற்று கிடக்கும் உள்ளம் புத்துணர்ச்சியுடன் புதிய பாதையில் பயணிக்க நிச்சயம் எமக்கு அற்புதமான வாசிப்பு அவசர தேவையாகும்.

உலகம் புதிய பார்வைகளை கொண்டோரை மதிக்கிறது. அவர்களை போற்றிப் புகழ்கிறது. அவர்களே இந்த உலகின் எதிர்காலத்தை திட்டமிடுகிறார்கள். நாளைய நாட்களை வடிவமைக்கிறார்கள். அவர்களுள் ஒருவராக நாமும் இருக்கக் கூடாதா? நாம் செல்வதற்கு பொருத்தமான பாதைகள் இல்லாவிட்டால் எமக்கான பாதைகளை நாமே வடிவமைத்துக் கொள்வோம். எம் பயணங்களை அடைய பாதைகள் மட்டும் போதாது என்றால் சில சிறகுகளையும் உருவாக்கிக் கொள்வோம்.

எம் சிந்தனைகளுக்கு விலங்குகள் தேவையில்லை. எல்லோரும் சிந்திப்பது போன்றுதான் நாமும் சிந்திக்க வேண்டும் என்ற எந்தவொரு கட்டுப்பாடும் இல்லை. ஒரு கணம் உலக வரலாற்றை உற்றுப் பாருங்கள். புதிது புதிதாக சிந்தித்து புத்தாக்குனர்களாய் திகழ்ந்தவர்கள்தான் உலக வரலாற்றின் திசையை மாற்றி அமைத்திருக்கிறார்கள்.

புதிய தேசத்தை தேடிப் புறப்பட்ட கொலம்பஸ், புதிய வியாபாரத்தை தேடிய அம்பானி, புதிய பாதையை நாடிய ரைட் சகோதரர்கள் என இந்த பட்டியல் மிகவும் நீளமானது. இதில் நாமும் இணைந்துகொள்ள வேண்டாமா?

சிறைகளில் அடைக்கப்பட்டிருக்கும் சிந்தனைகளை விடுதலை செய்து அவற்றிற்கு புதிய சிறகுகளை பரிசளியுங்கள். அகரத்தில் ஆரம்பித்து சிகரம் நோக்கி பயணிக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹதீஸ் பூங்காவிலிருந்து

ஏ.ஆர்.எம். ஸஜித் (இஸ்லாஹி)

அல்லாஹுத்தஆலா கூறியதாக அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறியதை அபூஹுரைரா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள்: "எனது அடியான் நபிலான அமல்களின் மூலம் என்னை நெருங்கிக் கொண்டே இருக்கின்றான். அவனை நான் நேசிக்க ஆரம்பித்து விட்டால் அவன் கேட்கும் செவியாக, அவன் பார்க்கும் கண்ணாக, அவன் பிடிக்கும் கரமாக, அவன் நடக்கும் காலாக ஆகிவிடுவேன். அவன் என்னிடம் எதையும் கேட்டால் கொடுப்பேன். அவன் பாதுகாப்புத் தேடினால் அவனை நான் பாதுகாப்பேன்." (ஸஹீஹுல் புஹாரி)

அல்ஹதீஸ் அல்குத்ஸிய்யு என்றால் அல்லாஹ் கூறுவதை நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் எடுத்துரைப்பதாகும். அதாவது, பொருள் அல்லாஹ்வினதும் சொல் நபியினதுமாக காணப் படும். மேற்படி ஹதீஸும் ஒரு நீண்ட ஹதீஸுல் குத்ஸியினுடைய ஒரு பகுதியாகும்.

இந்த ஹதீஸுல் குத்ஸியூடாக நாம் மிக முக்கியமான ஒரு விடயத்தை அறிந்து கொள்ள முடிகின்றது. அதுதான் அல்லாஹ்வின் நேசம் ஒரு மனிதனை அடைந்து விட்டால் அவன் முற்று முழுதாக அல்லாஹ்வின் பொறுப்பில் ஆகிவிடு கின்றான் என்பதாக அல்லாஹ் வாக்குறுதி அளித் துள்ளமையாகும்.

உலகில் வாழ்கின்ற ஒவ்வொரு மனிதனும் அடைந்து கொள்ளத் துடிக்கும் மிக முக்கியமான விடயமாகக் காணப்படுவதே அல்லாஹ்வின் அன்பாகும். இவ்வன்பை பெற்றுக் கொள்கின்ற மனிதன் ஈருலகிலும் ஜெயம் பெற்று விடுகின்றான். அல்லாஹ் ஒரு மனிதன் மீது கொள்கின்ற மிகப் பெரும் அன்பே அவன் அம்மனிதனுக்கு நேர்வழியை (ஹிதாயத்) வழங்குவதாகும்.

அவன் நோவழியைப் பெற்ற பின்னர் தன் ரப்பினுடைய முழு வடிவிலான அன்பையும் அரவணைப்பையும் பெற்றுக் கொள்வதற்குரிய வழியே மேற்படி ஹதீஸுல் குத்ஸியில் காட்டப் பட்டுள்ள நபிலான அமல்கள் எனப்படும் மேலதிக வணங்கங்களை புரிவதாகும்.

மனிதன், அல்லாஹ் தன் மீது கடமையாக்கிய வற்றை நிறைவேற்றாதபோது தன்னை அவன் குற்றம் பிடித்து தண்டித்து விடுவான் என்ற எண்ணத்தில் அவன் பர்ளுகளை நிறைவேற்றி விடலாம். ஆனால், அம்மனிதன் நபிலான வணக்கத்தில் ஈடுபடுவதானது நிச்சயமாக அவன் அல்லாஹ் மீது கொண்டுள்ள அன்பையே எடுத்துக் காட்டுகின்றது.

ஆகையால்தான், அல்லாஹ்வின் தூதரவர்கள் தங்களது இரு பாதங்களும் வீங்கிப் புடைக்கும் அளவு இராப் பொழுதுகளில் நின்று வணங்குவார்கள். ஒரு தடவை "அல்லாஹ்வின் தூதரே! உங்களது முன் பின் பாவங்களை அல்லாஹ் மன்னித்து விட்ட நிலையில் ஏன் இவ்வாறு தொழுகிறீர்கள்?" என அன்னை ஆஇஷா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்கள் கேட்ட போது நபியவர்கள், "நான் நன்றியுள்ள அடியானாக ஆக வேண்டாமா?" எனக் கேட்டார்கள். (புஹாரி, முஸ்லிம்)

அல்லாஹ்வின் தூதர் அவர்களே இவ்வாறு அல்லாஹ்வின் அன்பிற்காக சிரத்தை எடுத்துக் கொண்டுள்ளபோது, பாவங்கள் மலிந்த சூழலில் வாழ்க்கையை நகர்த்திக் கொண்டிருக்கும் நாம் எந்தளவு அவ்வன்பைப் பெற்றுக் கொள்ள முயற்சிக்க வேண்டும் என்பதைப் புரிந்து கொள்ள முடிகின்றது.

நபிலான வணக்கங்களாக நாம் மிக இலகுவாக அடையாளப்படுத்தக் கூடிய அமல்கள் பல இருக் கின்றன. அவற்றை சுருங்கக் கூறினால் பர்ளான தொழுகைகளின் முன் பின் சுன்னத்துக்கள், கியாமுல் லைல், ளுஹா, அல்குர்ஆன் திலாவத், திக்ர், தர்மம், பிறர் நலம் நாடல் மற்றும் பிறருக்கு ஸலாம் கூறுதல் இவை போன்றவையாகும்.

இவ்வமல்கள் எம் பார்வைக்கு மிக சிறியதாக தென்படக் கூடியவை. ஆனால், அதன் விளைவு எமக்கு இலகுவாக அல்லாஹ்வின் அன்பைப் பெற்றுத் தந்து அவனது உதவிகளையும் எமக்கு நினையாப் புறத்திலிருந்து பெற்றுத் தரக் கூடியவை.

மேற்படி ஹதீஸில் கூறப்பட்டிருக்கும் கேட்கும் செவியாக, பார்க்கின்ற கண்ணாக, பிடிக்கின்ற கரமாக மற்றும் நடக்கின்ற காலாக மாறுவதென்பது அவனுக்கு அல்லாஹ் பல வழிகளிலும் தனது உதவியை வழங்குவதாகும். அல்லாஹ் அவனுக்கு வருகின்ற பிரச்சினைகள் துன்பங்களிலிருந்து அவனைக் காக்கின்றான். அவன் அழைக்கின்றபோது பதிலளிக்கின்றான் மேலும் உள்ளத்தில் மகிழ்ச்சியை ஏற்படுத்துகின்றான்.

அல்லாஹ்வின் அன்பின்பாலும் அவனது உதவி யின்பாலும் நாம் என்றும் தேவையுடையவர்களாக இருக்கின்றோம். எமது கல்வி வாழ்வு, எதிர்காலம், இம்மை-மறுமை சிறப்புற அல்லாஹ்வை நாம் நெருங்க வேண்டியது மிகவும் அவசியமாகும்.

எனவே, பர்ளான கடமைகளை நிறைவேற்றுவது டன் எமது அமல்களை சுருக்கிக் கொள்ளாது அல் லாஹ்வின் நேசத்தையும் திருப்பொருத்தத்தையும் பெற்றுத் தரக் கூடிய நபிலான அமல்களிலும் அதிக கவனம் செலுத்தி அல்லாஹ்வின் பேருதவிகளை கண் முன்னே காண்கின்ற பாக்கியசாலிகளாக மாறுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கிலத்தில்: ஸனீயாஸ்னைன் கான் (இந்தியா)
தமிழில்: ஹஸன் இக்பால், யாழ்ப்பாணம்

# அல்குர்ஆன் தடுக்கும் தீய நடத்தைகள்



**01. கஞ்சத்தனம்**

இஸ்லாம் செலவு செய்வதில் ஊதாரித்தனமாகவோ, கஞ்சத்தனமாகவோ அல்லாமல் நடுநிலைப் போக்கைக் கையாளுமாறு விசுவாசிகளுக்கு கட்டளை இடுகிறது. ஆடம்பர அநாவசியத்தையோ அல்லது கேவலமான கஞ்சத்தனத்தையோ இஸ்லாம் வெறுத்தொதுக்குகிறது. அல்குர்ஆனில் அல்லாஹ் பின்வருமாறு கூறுகின்றான்: ''நிச்சயமாக அல்லாஹ் கர்வமுடையோராக, வீண் பெருமை உடையோராக இருப்பவர்களை நேசிப்பதில்லை. அத்தகையோர் உலோபித்தனம் செய்வதுடன் பிற மனிதர்களையும் உலோபித்தனம் செய்யும்படி தூண்டுகிறார்கள். அல்லாஹ் தன் அருட்கொடையிலிருந்து அவர்களுக்குக் கொடுத்ததை மறைத்துக் கொள்கிறார்கள்.'' (ஸூரா அன்னிஸா: 36, 37)





**02. கர்வம்**

'தான்' எனும் கர்வமும் அகந்தையும் அல்லாஹ் வெறுக்கின்ற பண்புகளில் ஒன்றாகும். இப்லீஸ் அல்லாஹ்வைப் பணிய மறுத்த தன் காரணமும் கர்வமே ஆகும். ஆதம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களுக்கு ஸுஜூது செய்ய மறுத்த காரணத்தை இப்லீஸ் பின்வருமாறு கூறுகின்றான்: ''நீ என்னை நெருப்பில் இருந்து படைத்தாய். ஆதமை மண்ணிலிருந்து படைத்தாய்.'' (ஸூரா அல்அராப்: 12) லுக்மான் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் தனது புதல்வனுக்கு கூறிய அறிவுரைகளில் பின்வரும் வசனம் கவனிக்கத்தக்கது: ''பெருமையோடு உன் முகத்தை மனிதர்களை விட்டும் திருப்பிக் கொள்ளாதே! பூமியில் பெருமையாகவும் நடக்காதே! பெருமைக்காரன், ஆணவம் கொண்டோர் எவரையும் நிச்சயமாக அல்லாஹ் நேசிக்க மாட்டான்.'' (ஸூரா லுக்மான்: 18) கர்வம் பற்றி இறைத்தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) பின்வருமாறு கூறினார்கள்: ''கடுகளவு தற்பெருமை உடையோரும் நிச்சயமாக சுவர்க்கம் நுழைய மாட்டார்.''



**03. சந்தேகிக்கும் குணம்**

நற்குணங்களைப் பற்றி குறிப்பிடும்போது அல்குர்ஆன் பின்வருமாறு கூறுகிறது: ''முஃமின்களே! சந்தேகமான பல எண்ணங்களை விட்டும் விலகிக் கொள்ளுங்கள். ஏனெனில், சந்தேக எண்ணங்களில் சில பாவங்களாக இருக்கும். பிறர் குறைகளை நீங்கள் துருவித் துருவி ஆராய்ந்து கொண்டிருக்காதீர்கள். மேலும், உங்களில் சிலர் சிலரைப் பற்றி புறம் பேச வேண்டாம்.'' (ஸூரா ஹுஜுராத்: 12) நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்: ''சந்தேக எண்ணங்ளைத் தவிருங்கள். மற்றையவரின் குறைகளைத் துருவித் துருவி ஆராயாதீர்கள்.''



**04. பெருமையடித்தல்**

இஸ்லாம் வெறுக்கும் பண்புகளில் முக்கியமானது பெருமையடித்தலாகும். தற்பெருமைக்காகச் செய்யும் எந்தவொரு நற்காரியமும் அல்லாஹ்வினால் அங்கீகரிக்கப்பட மாட்டாது. ஈமான் கொண்டவர்களின் எந்தவொரு செயலும் இறை திருப்தியை நோக்காகக் கொண்டே இருக்க வேண்டும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



### 05. பேராசை

பணம், பொருள், பதவி, அதிகாரம், புகழ் என்பவற்றின் மீதான அதீத ஆசை பேராசை எனக் கருதப்படுகிறது. இது இஸ்லாம் கண்டிக்கும் மற்றொரு பண்பாகும். ஒரு முஸ்லிம் உலக விடயங்களில் பேராசை கொண்டவனாக இருக்க முடியாது. மனிதன் சொத்து செல்வங்களைப் பன்மடங்காகப் பெருக்குவதில் அதிக ஆர்வம் காட்டுகின்றான். சேர்க்க வேண்டியது சொத்து செல்வங்களை அல்ல, நற்காரியங்களையே என இறுதியிலேயே அவன் உணர்கின்றான். அல்குர்ஆன் பின்வருமாறு கூறுகிறது: ''பிள்ளைகளும் சொத்து செல்வங்களும் உங்களுக்கான சோதனைக ளேயன்றி வேறில்லை. அல்லாஹ்விடமே உயர்ந்த நற்கூலி உள்ளது.'' (ஸூரா தகாபுன்: 15)



### 06. பொறாமை

மனிதர்கள் தமக்கிடையில் உலக விடயங்கள் தொடர்பில் பொறாமை கொள்வதை விட்டும் தூரமாகி இருக்கும்படி இஸ்லாம் விசுவாசிகளை ஏவுகிறது. நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்: ''நெருப்பு விறகை எரிப்பதுபோல பொறாமை அவனது நற்செயல்களை எரித்து விடுகிறது.''

### 07. புறம் பேசுதல்

ஒருவர் இல்லாத சமயத்தில் அவரைப் பற்றிய குறைகளை மற்றவருடன் உரையாடுதல் புறம் பேசுதல் எனலாம். இஸ்லாம் இதனை மிக வன்மையாகக் கண்டிக்கிறது. ஒருவர் மீது அபாண்டம் கூறுதல், பழி சொல்லுதல், பொய்ச்சாட்சி கூறுதல் என்பனவும் இஸ்லாம் வெறுக்கும் பண்புகளாகும். அல்லாஹ் அல்குர்ஆனில் பின்வருமாறு கூறுகின்றான்: ''அன்றியும், உங்களில் சிலர் சிலரைப் பற்றி புறம் பேச வேண்டாம். உங்களில் எவராவது தம்முடைய இறந்த சகோதரனின் மாமிசத்தைப் புசிக்க விரும்புவாரா? (இல்லை) அதனை நீங்கள் வெறுப்பீர்கள்.'' (ஸூரா ஹுஜுராத்: 12)

### 08. ஊதாரித்தனம்

வீண்விரயம், தேவைக்கு அதிகமான ஆடம்பர செலவுகள் என்பன அல்லாஹ் வெறுக்கும் பண்புகளாகும். வீண்விரயம் செய்பவர்கள் ஷைத்தானின் சகோதரர்களாவர் என அல்லாஹ் கடிந்துரைக்கிறான். ''வீண்விரயம் செய்யாதீர்கள். விரயம் செய்பவர்கள் ஷைத்தான்களின் சகோதரர்களாவர். ஷைத்தானோ தன்னுடைய இறைவனுக்கு நன்றி கெட்டவனாக இருக்கின்றான்.''
(ஸூரா அல் இஸ்றா: 27)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அறிவுத் திறன் மிக்க காகம்

பாலர் வகுப்பிற்கு செல்லும் நாட்களில் நான் முதலாவதாகப் பாடிய பாடலும் முதலாவதாகப் படித்த கதையும் காகம் பற்றியதுதான். ''காகம் ஒன்று காட்டிலே தாகத்தினால் தவித்ததாம்...'' என்ற சிறுவர் பாடல் இன்னும் ஞாபகத்தில் இருக்கின்றது. காகங்கள் பொதுவாக மனிதர்களோடு மிகவும் நெருங்கி வாழக் கூடிய பறவை. அதனால்தான் வழமைக்கு மாற்றமாக வீட்டைச் சுற்றி காகங்கள் கரைந்தால் வீட்டிற்கு விருந்தாளிகள் வர உள்ளார்களென மூத்தவர்கள் கூறுவதுண்டு. மேலும், ஒற்றுமைக்கும் பகிர்ந்து உண்ணலுக்கும் காகங்கள் உதாரணமாக எடுத்துக் காட்டப்படுகின்றன. இந்தக் காகம் பற்றிய பல வியப்பான செய்திகளை இத்தொடரில் பார்க்கலாம்.

### இனமும் குடும்பமும்

காகம், காக்கை என்று தமிழிலும் 'Crow' என்று ஆங்கிலத்திலும் 'غُرَابٌ' என்று அரபு மொழியிலும் அழைக்கப்படுகின்றது. காகம் கார்விடே (Corvidae) குடும்பத்தைச் சேர்ந்த பறவை இனமாகும். பெரும் பாலும் கறுப்பு நிறத்திலும் அரிதாக வெள்ளை நிறத்திலும் இருக்கும் பறவை இனமாகும். காகங் களில் அவுஸ்திரேலிய, வட அமெரிக்க, ஆபிரிக்க, ஐரோப்பிய, ஆசிய என 40 வகை இனங்கள் உள்ளன. கரியன் காகம், வீட்டுக் காகம், அண்டங் காகம் என்பன ஆசியக் காக்கை இனங்களாகும். உலகில் அண்டார்டிகா பகுதி தவிர்ந்த மற்றைய எந்தப் பருவ நிலையிலும் எல்லா நிலப் பகுதிகளிலும் வாழக் கூடிய தகவமைப்பைக் காகங்கள் பெற்றுள்ளன.

### உடலமைப்பு

கடினமான, தடிப்பான அலகு கடினமான எந்தப் பொருளையும் உடைத்து உண்ண இலகுவாக இருக்கின்றது. கருமை நிற, அடர்த்தியான உடல் மயிர்களும் சிறகுகளும் அவற்றுக்கு குளிர், வெப்ப காலங்களில் தகுந்த போர்வையாக அமைகின்றன. இரு பக்கமும் இறகுகள் வேகமாகவும் காற்றின் வேகத்திற்கு ஈடு கொடுத்தும் பறக்க உதவுகின்றன. வால் பகுதி அவசர அவசரமாகத் திசைகளை மாற்றி மாற்றிப் பறப்பதற்கு ஒத்துழைப்பதோடு இரண்டு கால்களும் அவற்றில் உள்ள நான்கு விரல்களும் அதில் உள்ள பலமான நகங்களும் கிளைகளைப் பற்றிப் பிடித்து நிற்பதற்கும் இரைகளை லாவகமாகப் பற்றிக் கொண்டு பறப்பதற்கும் உதவுகின்றன.

### வாழ்க்கை முறை

காகங்கள் கூட்டமாக வாழும் பறவை இனம். அவை எப்போதும் தனித்துச் செல்வதில்லை. ஒரு கூட்டத்தில் 10 முதல் 30 வரையான காகங்கள் இருக்கும். பெண் காகங்கள் மூன்று வருடங்களிலும் ஆண் காகங்கள் ஐந்து வருடங்களிலும் இனப் பெருக்கத்திற்குத் தயாராகி விடும். புறா மற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பென்குயின் பறவைகள் போன்று காகங்களும் ஆண், பெண் ஜோடி சேர்ந்தால் இறுதிவரை பிரியாமல் இருக்கும். மற்ற பறவைகள் மிருகங்கள் போலல்லாமல் இவை மறைவாகவே இனப் பெருக்கத்தில் இணையும். இது காகங்களிடமுள்ள ஒரு விசேட குணமாகும்.

முட்டையிடும் பருவம் வந்ததும் ஆண், பெண் காகங்கள் இரண்டும் இணைந்து கம்புக் குச்சிகள், இலைகள், மர நார்கள் என்பவற்றைக் கொண்டு உயரமான கிளைகளில் கூடுகளைக் கட்டும். பின்பு அக்கூட்டில் முட்டைகளை இடும். இவை கூடு கட்டி முட்டையிடும் பருவம் வரும் வரை காத்திருக்கும் குயில்கள் இத்தருணத்தில்தான் தமது முட்டைகளையும் காகத்தின் கூட்டில் இட்டுவிட்டுச் செல்லும். காகம் 4 முதல் 7 முட்டைகளை இடும். அநேகமாக பெண் காகம்தான் முட்டைகளை அடை காக்கும். ஆண் காகம் கூட்டைப் பாதுகாக்கும். சுமார் 18 நாட்களில் முட்டை பொரிந்து குஞ்சுகள் வெளிவரும். இனி இரண்டு காகங்களும் சேர்ந்து குஞ்சுகளுக்கு மாறி மாறி இரை தேடிவந்து கொடுத்து வளர்த்தெடுக்கும். இவ்வாறு சுயாதீனமாக ஒரு காகம் 20 வருடங்கள் வரை உயிர் வாழக் கூடியது.

**உணவு முறைமை**

காகங்கள் அனைத்துமுண்ணிகள். ஒரு காகத்திற்கு தினமும் சராசரியாக 280 கிராம் உணவு தேவை. எனவே, அவை தானியங்கள், பூச்சி, புழுக்கள், விதைகள், தவளை, நண்டு, சிறிய குருவிகள், மாமிசங்கள், இறந்துபோன பாம்பு, எலி, தவளை போன்ற உயிரினங்களின் உடல்கள் என அனைத்தையும் உண்ணும். வயல்களில் உள்ள பூச்சிகளையும் உணவாகக் கொள்வதால் ''உழவர்களின் நண்பன்'' எனப்படுகிறது. சிலபோது வீட்டில் வளர்க்கும் கோழிக் குஞ்சுகளையும் காகங்கள் வந்து தூக்கிச் சென்று உண்டு விடும். நாம் வீட்டிலிருந்து வீசும் எஞ்சிய எச்சில்களை எல்லாம் இவை தின்று சூழலை சுத்திகரிக்கும் பணியையும் செய்கின்றன. எங்காவது உணவொன்றைக் கண்டால் தனியாக வந்து உண்ணாது தனது கூட்டத்தையே அழைத்து வந்து பங்குபோட்டு பகிர்ந்து உண்ணும்.

**அறிவுத் திறன்**

**1. நிடோபோடாலியம்**

பறவை இனங்களிலேயே கூடுதலான அறிவுத் திறன் கொண்ட பறவையாக காகம் கணிப்பிடப் பட்டுள்ளது. காகத்தின் அளவில் உள்ள பறவைகளோடு ஒப்பிட்டுப் பார்த்தால் இதனுடைய மூளையே பெரிது. காகங்களின் கூரிய அறிவுத் திறனுக்குக் காரணம் அதன் மூளைப் பகுதியில் அமைந்துள்ள நிடோபோடாலியம் என்ற பகுதிதான் என பறவையியற் துறை ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர். நிடோபோடாலியம் என்பது பறவைகளின் அறிவுத் திறனுக்கு காரணமாக உள்ள மூளையின் செயல்பாட்டுப் பகுதியாகும். அமெரிக்க மற்றும் கனடாவில் காணப்படும் ஜெக்டா எனப்படும் காகம் மற்றும் சிம்பன்சிகளின் மூளையில் உள்ள சிந்தனையைத் தூண்டும் 'நியோகார்டெக்ஸ்' பகுதி மனிதனின் மூளைப் பகுதியில் அமைந்துள்ள 'நியோகார்டெக்ஸ்' பகுதியை பெரிதும் ஒத்த அமைப்பில் காணப்படுகின்றது. அதேபோன்று, சிம்பன்சிகளுடையதை விட காகங்களின் 'நியோகார்டெக்ஸ்' பகுதி பெரிதாக இருப்பதும் காகங்களின் அறிவுத் திறனுக்கு முக்கிய காரணமாகும்.

**2. காகம் ஒன்று காட்டிலே**

காகத்தின் அறிவுக் கூர்மைக்கு சிறந்த உதாரணம்தான் இக்கட்டுரையின் ஆரம்ப வரிகளில் குறிப்பிட்ட ''காகம் ஒன்று காட்டிலே...'' சிறுவர் பாடல். உண்மையில் அது வெறும் பாடல் அல்ல. காகங்களின் அறிவுத் திறனில் ஒன்று. தாகத்தைத் தணித்துக் கொள்ள பானையின் அடியில் கிடக்கும் நீரின் மட்டத்தை உயர்த்த சிறு கற்களைப் போட்டு பின் நீர் மட்டம் உயர்ந்ததும் தாகம் தீரக் குடித்துவிட்டு சந்தோஷமாகப் பறந்து சென்ற காகத்தின் கதையை பாடசாலையில் முதலாம் ஆண்டில் படித்திருப்போம். அதேபோன்று, பாட்டி சுட்ட வடையைத் திருடிய காகம், காகத்திடமிருந்து முதற் தடவை நரி வடையைத் திருடினாலும் இரண்டாம் தடவை பாடம் படித்து புத்தியுடன் செயற்பட்ட காகத்தின் புத்திசாதுர்யம் என்பவற்றை எல்லாம் வெறும் கதைக்காகப் படித்திருந்தாலும் அவற்றிலுள்ள அறிவியல் விடயங்கள் இன்றுதான் புரிகின்றன, மெய் சிலிர்க்கின்றன.

**3. எம்மை அடையாளம் காணும் ஆற்றல்**

எமது ஒவ்வொருவருடைய வீட்டைச் சுற்றியும் எப்போதும் ஒரே காகங்கள்தான் சுற்றிக் கொண்டிருக்கும். அக்காகங்கள் அவ்வீட்டு அங்கத்தினரை நன்கு ஞாபகத்தில் வைத்திருக்கும். காகங்கள் முக வடிவமைப்பைக் கொண்டு ஒரு மனிதனை மற்றொரு மனிதனிடமிருந்து வேறுபடுத்தி அடையாளம் காண்கின்றன என்பது அண்மையில் செய்யப்பட்ட ஆய்வுகளில் தெரிய வந்துள்ளது. இதனால்தான் வீட்டுக்கு வரும் விருந்தினரை அடையாளம் கண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞாபகத்தில் வைத்துக் கொள்ளும் இவை மீண்டும் அவர்கள் வரும் போது ''கா... கா...'' என்று கரை கின்றன. இதனால்தான் எம் முன்னோர்கள் காகம் கரைந்தால் வீட்டுக்கு விருந்தினர் வருகின்றனர் என்று கூறினார்கள் போலும். தெருவில் வரும் மீன்காரனை இவற்றுக்கு நன்றாகவே தெரியும். அவர் ''மாலோ.. மாலோ..'' என்றதும் இவை பதிலுக்கு ''கா... கா...'' என்று கரைந்து கொண்டு வந்து சேரும்.

**4. மனிதக் குரலில் பேசவும் முடியும்**

ஜொஷா கிளெயின் என்ற அறிவியல் அறிஞர் காகங்களை நாம் சமுதாயத்திற்குப் பயனுள்ள வகையில் பழக்கப்படுத்தலாம் என முதற் தடவை யாக ஓர் ஆய்வை மேற்கொண்டார். அதில் அவர் புறாக்களைப் போன்று இக்காகங்களையும் மிக இலகுவாக எம்மால் பழக்கப்படுத்திக் கொள்ள முடியும் என்கின்றார். காகங்களைப் பழக்கி திருட்டு போன்ற சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுத்திய சம்பவங்களும் சில நாடுகளில் நடந்துள்ளன. இதனால் தான், இவற்றைச் செல்லப் பறவைகளாக வளர்ப்பது சில நாடுகளில் சட்டவிரோதமாக்கப்பட்டுள்ளது. நன்கு பழக்கப்படுத்தினால் இவற்றாலும் கிளிகளைப் போன்று மனிதக் குரலில் பேச முடியுமெனவும் மேற்கண்ட ஆய்வில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

**5. திருடித் தின்னும் குணம்**

வீட்டில் சமையலறையில் ஏதும் உணவுகளை வைப்பதை காகம் ஒன்று பார்த்து விட்டால் போதும் யாரும் இல்லாத சமயம் பார்த்து திருட்டுத்தனமாக உள்ளே நுழைந்து சட்டியை மூடியிருக்கும் மூடியைத் தூக்கி அப்பால் போட் டுவிட்டு உணவைத் திருடிக் கொண்டு பறந்து விடும். கோழி முட்டை, மீன், இறைச்சி, பாண் எதுவானாலும் பரவாயில்லை; லபக்கென்று தூக்கிக் கொண்டு பறந்து ''கா... கா...'' என்று மற்றைய காகங்களையும் அழைத் துக் கொண்டு விருந்துண்ணும். சிறுவயதில் படித்த பாட்டி சுட்ட வடையைத் திருடிய காகத்தின் கதை ஞாபகமிருக்கிறதா?


**6. விதைகளை உடைத்து உண்ணும் விந்தை**

ஜப்பானில் இருக்கும் ஒரு வகையான அண்டங் காகங்கள் விதைகளை உடைத்து அதனுள் இருக்கும் பருப்பை உண்ண அற்புதமானதொரு நுட்பத்தைக் கையாள்கின்றன. வாகனங்கள் விரைந்து செல்லும் நகரத்தின் மையப் பகுதியில் உள்ள ஒரு சிக்னலின் மேலிருந்து தமது அலகால் கடித்து உடைக்க முடியாத விதைகளை கீழே போடு கின்றன. வாகனங்களின் சக்கரத்தில் அரைபட்ட விதைகளிலிருந்து வெளியே தெறிக்கும் பருப்பினை பின்னர் எடுத்து உண்கின்றன. அதுவும் பாதசாரிகள் நடந்து செல்வதற்கான பச்சை விளக்கு எரிந்தவுடனே தான். அதுவரை காத்திருக்கும். பச்சை விளக்கு எரிந்ததும் கீழே வந்து உண்ணும். சிவப்பு விளக்கு எரியும்போது வாகனங்கள் வராது என்ற உண்மையை அக்காகங்கள் அறிந்துள்ளன.

**மனிதனுக்குக் கற்றுக் கொடுத்த காகம்**

யாராவது இறந்தால் அவர்களது உடலை மண்ணில் புதைத்து அடக்கி விடும் பழக்கம் பொதுவாக அனைத்து மதங்களிலும் இருக்கின்றது. இம்முறையை மனிதனுக்கு முதற் தடவையாகக் கற்றுக் கொடுத்தது ஒரு காகம்தான். இதனை அல்லாஹ் திருமறையில் கூறுகின்றான். ஆதம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களுடைய இரண்டு புதல்வர்களான ஹாபில், காபில் இருவரில் ஒருவர் மற்றவரைக் கொலை செய்துவிட்டு அந்த உடலை என்ன செய்வது என்று தெரியாமல் திண்டாடிக் கொண்டிருந்தார். அவ்வேளை அல்லாஹ் ஒரு காகத்தை அவரிடம் அனுப்பினான்.

**29ஆம் பக்கம் பார்க்க...**





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விருந்து



எம்.ஏ. ரஹ்மான்

முதலாம் உலக மகா யுத்தத்தின்போது துருக்கி ஜேர்மனியுடன் சேர்ந்து கொண்டது. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, இளம் அரேபிய இயக்கம் வலிமை பெறுவதாயிற்று. ஷரீப் ஹுஸைன் தேவைப்பட்ட ஆயுதங்களையும் படைத் தளவாடங்களையும் சேகரித்தார். இறுதியில், துருக்கிய மேலாதிக்கத்தை எதிர்த்து அரேபிய விடுதலையைப் பிரகடனப்படுத்தினார். இந்த நடவடிக்கைக்குப் பிரித்தானியர் அனுசரணையாக இருந்தனர்.

இந்த வகையிலே, கர்னல் லோறன்ஸ் என்பவர் அரேபியர்களுக்குத் தோன்றாத் துணையாக அமைந்தார். ஷரீப் ஹுஸைன், அமீர் பைஸல் ஆகிய தலைவர்களுக்குப் பின்னாலே நின்று சக்தி மிக்க சூத்திரதாரியாக இயங்கினார். அவர் ஒரு மர்ம மனிதராகப் பாராட்டப்பட்டார். தம்மிடையே சண்டை பிடித்த பல்வேறு அரேபிய குலங்களையும் துருக்கியருக்கு எதிரான போரிலே ஒன்றிணைத்த பெருமையும் அவரையே சாரும். எனவே, துருக்கிய அரசாங்கம் அவர் மீது விரோதம் பாராட்டுதல் தவிர்க்க முடியாததாக அமைந்தது. லோறன்ஸை கைது செய்ய உதவுபவர்களுக்கு ஏழரை இலட்சம் ரூபாய் சன்மானம் அளிக்கத் துருக்கிய அரசாங்கம் முன்வந்தது.

ஒரு நாள் மாறுவேடம் புனைந்துகொண்டு துருக்கியப் படை வரிசையைப் பார்வையிடச் சென்றார் லோறன்ஸ். அவர் பனூஸாகர் பகுதியிலே தங்க நேர்ந்தது. இங்கே வாழ்ந்த கோத்திரத்தார் துருக்கிய எஜமானர்களுக்கு விசுவாசமானவர்களாகக் காணப்பட்டார்கள். அந்தக் கோத்திரத்தாரின் ஷேக்கினைச் சந்தித்து நட்புப் பாராட்டினார். ஷேக்கின் விருந்தினராக லோறன்ஸ் தங்கியிருந்தார்.

துருக்கியர் அளிப்பதாக அறிவித்த கொழுத்த சன்மானத்தைப் பெறும் ஆசைக்கு ஷேக் மசிந்தார். இதனால் விரைதூதர் ஒருவரைத் துருக்கியரிடம் அனுப்பி வைத்தார். இதனை மோப்பம் பிடித்த லோறன்ஸ் தப்பியோடினார்.

விருந்தினர் ஒருவரைக் காட்டிக் கொடுப்பது இஸ்லாத்திற்கு முரணானது. பனூஸாகர் கோத்திரத்தார் அவமான உணர்வு பெற்றார்கள். அவர்கள் ஒன்றுகூடி நஞ்சிட்ட கோப்பியை அருந்துமாறு தங்களுடைய ஷேக்கினை நிர்ப்பந்தித்தார்கள்.

PUBLIC LIBRARY JAFFNA



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இஸ்லாமிய போர்கள் பற்றி அறிந்து கொள்வோம்



ஜே.எம். பிர்னாஸ்
சிறாஜிய்யா அரபுக் கல்லூரி
ஓட்டமாவடி

- *பத்ர் போர் - ஹிஜ்ரி 2 ரமழான் 17 (கி.பி. 624)*
- *உஹது போர் - ஹிஜ்ரி 3 ஷவ்வால் 3 (கி.பி. 625)*
- *கந்தக் போர் - (அகழி யுத்தம்) ஹிஜ்ரி 5 ஷவ்வால் 5 (கி.பி. 627)*
- *முஅத்தா போர் - ஹிஜ்ரி 8 ஜமாதுல் ஊலா (கி.பி. 630)*
- *தபூக் போர் - ஹிஜ்ரி 9 ரஜப் (கி.பி. 631)*
- *மக்கா வெற்றி - ஹிஜ்ரி 8 ரமழான் 20 (கி.பி. 630)*

---




Google என்பது அமெரிக்காவில் தலைமையகத்தைக் கொண்டு செயற்படும் ஒரு பன்னாட்டு நிறுவனமாகும். இணையத் தேடுபொறி தொழில்நுட்பம், இணைய விளம்பரத் தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் இந்நிறுவனம் செயற்படுகிறது. இதில் தேடுபொறி இதன் முதன்மையான சேவையாகும். 1998 இல் லாரி பேர்ஜ் / சேர்ஜ் பிரின் ஆகியோரால் துவங்கப்பட்ட இந்நிறுவனத்தின் முதல் பொதுப்பங்கு வெளியீடு 2004 இல் நடைபெற்றது. முழுமையாக பயன்படும் வகையில் உலகின் தகவல்களை ஒருங்கிணைப்பதே Google இன் நோக்கமாகும். ''தீமை இல்லாதிருத்தல்'' என்பது Google இன் அதிகாரபூர்வமற்ற நோக்கமாக அறியப்படுகிறது என்பது அமீது பட்டேல் என்ற Google பொருளியலாளரின் கூற்றாகும்.

2006 இல் இந்நிறுவனம் மௌன்டன் டியு / கலிபோனியாவுக்கு தனது தலைமையகத்தை மாற்றம் செய்து கொண்டது. உலகம் முழுவதும் ஒரு மில்லியனுக்கும் மேலான தரவு மையங்களைக் கொண்டிருப்பதாக நம்பப்படும் Google ஒரு நாளில் ஒரு பில்லியனுக்கும் மேலான தேடல்களைக் கையாள்வதாகவும் 24 Bettabite அளவுள்ள தகவல்களை சேமிப்பதாகவும் கண்டறியப்பட்டுள்ளது.

Google இன் மிக விரைவான வளர்ச்சியுடன் பல புதிய மென்பொருள் சேவைகளின் தோற்றம் நிகழ்ந்துள்ளது. Google Main Page வழங்கும் Google Search உடன் Google Mail / Google Documents / Google Plus / Google Image / Google News / Flacker / You tube போன்ற பல்வேறு சேவைகளை இந்நிறுவனம் வழங்கி உள்ளது. இன்னும் Google Chrome என்றும் உலவியை Google வெளியிட்டுள்ளது. தற்போது Android என்றும் கைப்பேசி இயக்கு மென்பொருளை அத்துறையில் பெறும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. Android மென்பொருளை Google தலைமையிலான Open huntshet Aliens தயாரித்து வெளியிட்டுள்ளது. 2015 ஆம் ஆண்டு அடிப்படையில் Google நிறுவனத்தின் வருமானம் அமெரிக்க டொலரில் 29, 321 பில்லியனும், நிகர வருமானமாக அமெரிக்க டொலரில் 8505 பில்லியனும், மொத்த சொத்துக்களாக அமெரிக்க டொலரில் 57, 851 பில்லியனும் என்ற அடிப்படையில் இருப்பதுடன், 2007 ஆம் ஆண்டு அடிப்படையில் 24, 400 பணியாளர்கள் பணிபுரிவதாக தொழில்நுட்ப தலைவர் சேர்ஜ் பிரின் மற்றும் நிருவாக தலைவர் எரிக் ஷ்மித் செய்தி வெளியிட்டுள்ளார்கள்.

எம்.கே.எம். பவாஸ்
சுலைமானிய்யா அ.க.
பண்டார கொஸ்வத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அரபுப் பழமொழிகள்

1. இலகுவாக பெற்றுக் கொள்பவை இலகு வாகவே சென்று விடும்
2. பேச முன் வார்த்தையை தெரிவு செய்
3. வார்த்தை வெள்ளி என்றால் மௌனம் தங்கம்
4. மனிதனை திருப்திப்படுத்துவது அடைய முடியாத இலக்கு
5. உடல் ஆரோக்கியம் குறைவாக உண்பதில் உண்டு
6. ஒரு சமூகத்தின் அனர்த்தம் இன்னொரு சமூகத்தின் அதிர்ஷ்டம்
7. அறிவின் விளைவு கற்றவற்றைக் கொண்டு செயற்படுவது
8. அதிகம் கண்டிப்பது வெறுப்புக்கு காரண மாகி விடும்
9. உன் நாயை பசி போடு; உன்னை பின் தொடர்ந்து வரும்
10. முட்களிலிருந்து திராட்சையை அறுவடை செய்ய முடியாது
11. ஒரு விடயத்தை அதிகமாக நேசித்தால் அதைப் பற்றி அதிகமாகப் பேசுவோம்
12. அமைதி அடைந்த உள்ளமே ஓய்வெடுப்பதற்கு சிறந்த தலையணை

**ஜஸ்வா யஸ்மின்**
**பாத்திமா ஸஹ்ரா பெ.அ.க. ஓட்டமாவடி**



# இஞ்சியிலுள்ள மருத்துவக் குணங்கள்

1. பசியை ஏற்படுத்தும்
2. ஞாபக சக்தியை அதிகரிக்கக் கூடியது
3. தூக்கமின்மையை நீக்கக் கூடியது
4. தடிமனை குணப்படுத்தும்
5. சுவாசத் தொகுதியில் ஏற்படும் நோய்களுக்கு நிவாரணமளிக்கும்
6. உடலிலுள்ள நோயெதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கச் செய்யும்
7. தலைவலிக்கு நிவாரணமளிக்கும்
8. தலைசுற்று மற்றும் மயக்க நிலையை நீக்கும்
9. இரைப்பையின் எரிவுகளை அகற்றும்
10. குளிர் காரணமாக ஏற்படும் கை, கால் விறைப்பை தடுக்கும்
11. எலும்புகளின் பலவீனத்தைக் குறைக்கும்

**ஸபியா நபியு**
**இஸ்லாஹிய்யா பெ.அ.க.**
**புத்தளம்**

# அன்னையே!

என்னுள் நீ
விதைத்திட்ட விதைகளெல்லாம்
வித்தாய்
முளைக்கின்றன...

கருவறையின் இருட்டறையில்
ஒளி தந்து எனை சுமந்தவள் - இன்று
எனக்குள் ஒளி விளக்காய்
தீபம் ஏற்றுபவள்
என் தாய்

அவள் மடியில் - நான்
உறங்கிட என்
அறிவுக் கண்ணை திறந்தவள்
என் தாய்

தன் பண்பாட்டு பாசறையில்
நல் ஒழுக்கங்களை விதைத்த
என் முதல் ஆசான்
என் தாய்

என் வாழ்வின்
அத்திவாரத்தின் அடிக்கல்லும்
என் உயிர்த் தாயே!!



**ஷப்னா ஹூசைன்**
**வெலம்பொட**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# இல்லை என்பது உண்மை

- பறவைக்கு பற்கள் இல்லை
- காண்டா மிருகத்தின் கொம்பில் எலும்பு இல்லை
- குயில் குளிர்காலத்தில் கூவுவது இல்லை
- சுண்டெலிக்கு வியர்ப்பதே இல்லை
- பல்லி நீர் குடிப்பது இல்லை
- கழுகு எதையும் கொன்று தின்பதில்லை
- ஒட்டகத்திற்கு பித்தப்பை இல்லை
- கங்காரு மற்ற மிருகங்கள் நிற்பதுபோல நான்கு கால்களில் நிற்பது இல்லை
- குளிர்காலத்தில் அந்தாட்டிக்காவில் ஓர் உயிரினமும் வாழ்வது இல்லை

**ருக்ஷான ஸித்திக்**
**அல் முஃமினாத் பெ.அ.க.**
**அக்குரணை**


# தஹஜ்ஜுத் தொழுகையின் நேரம்

- நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் இரவில் சேவல் கூவும்போது எழுவார்கள். (புகாரி: 1132)
- ஸல்மான் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அபூதர்தா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களிடம் இரவின் கடைசிப் பகுதியில் எழுந்து தொழும்படி ஆலோசனை கூறினார்கள்.
- இதை அறிந்த நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) ''ஸல்மான் கூறுவது உண்மையே'' என்றார்கள்.
- அல்லாஹ் ஒவ்வோர் இரவிலும் மூன்றில் ஒரு பகுதி இருக்கும்போது கீழ் வானத்திற்கு இறங்குகிறான். (புகாரி: 1145)
- ''என்னிடம் யாரேனும் பிரார்த்தித்தால் அதை நான் அங்கீகரிக்கிறேன்.'' *(புகாரி: 1145)*



**அன்ஸிபா நாஸிம்**
**இஸ்லாஹிய்யா வளாகம்**

# மின்சக்திப் பாவனை



வேலைகளைச் செய்வதற்கு சக்தி அவசியமாகும். முன்னைய காலங்களில் மிகவும் சிரமத்துடன் செய்யப்பட்ட வேலைகள் தற்காலத்தில் பல்வேறு சக்தி வடிவங்களைப் பயன்படுத்தி இலகுவாகச் செய்வதற்கு மின்சக்தி பயன்படுத்தப்படுகிறது. அன்றாட வாழ்வில் தொழிற்சாலைகளில் இயந்திரங்களை செயற்படுத்தல், வளிப்பதனாக்கல் செயற்படுத்தல், வெவ்வேறு தொடர்பாடல்களை மேற்கொள்ளல், வாகனங்களை செயற்படுத்தல் போன்ற செயற்பாடுகளில் மின் பயன்படுத்தப்படுகிறது. இதிலிருந்து அன்றாட வாழ்வில் மின்னின் முக்கியத்துவத்தை அறியக் கூடியதாக உள்ளது.

இலங்கையில் அதிகளவான மின்சாரம் நீர்நிலைகளில் இருந்தே உற்பத்தி செய்யப்படுகிறது. மழை பெய்யும் காலங்களில் இந்நீர்நிலைகள் நிரம்புகின்றன. மழை இல்லாத காலங்களிலும் இம்மின்சாரத்தையே பாவிக்க வேண்டும். மனிதர்கள் தேவைக்கு அதிகமாக மின்சாரத்தைப் பயன்படுத்துகின்றார்கள். இதனால் மின்சக்தி குறைந்து மின் வெட்டு ஏற்படுகிறது. மின்வெட்டு நேரங்களில் மனிதர்கள் எத்தனையோ கஷ்டங்களை அனுபவிக்கின்றனர். எனவே, தேவைக்கு ஏற்ப மின்னை வினைத்திறனுடன் பயன்படுத்தல் எமது பொறுப்பாகும்.

**எம்.ஏ. ஆயிஷா அமானா**
**க/தெநு/ வெலம்பொட மு.ம.வி.**
**வெலம்பொட**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவுக் களஞ்சியம்



ஏ.ஆர்.எம். ஜிப்ரி BEd, MEd

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் முஸ்லிம் சேவையில் இடம்பெறும்
அறிவுக் களஞ்சிய நிகழ்ச்சி வினாக்களின் தொகுப்பு

## முதல் சுற்று (இஸ்லாம் தொடர்பான வினாக்கள்)

1. ஒரு ரசூல் மறைந்து மற்றொரு ரசூல் வரும் வரை எதுவித வேத வழிகாட்டலும் இன்றி உலகில் வாழ்ந்திருப்பவர்கள் எந்த அரபுப் பதத்தால் அழைக்கப்பட்டனர்? ஈஸா (அலைஹிஸ்ஸலாம்) அவர்களின் காலத்தின் பின் முஹம்மத் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் வரையிலான 400 வருட காலத்தில் வாழ்ந்தவர்களையே இப்பதம் குறிக்கின்றது.
2. அல்குர்ஆனை ஒன்று திரட்டுவதற்காக ஹஸரத் அபூபக்ர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களால் ஹஸரத் ஸெயித் இப்னு தாபித் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் தலைமையில் குழுவொன்றை நியமித்தார்கள். இக்குழுவினரால் ஒன்று திரட்டப்பட்ட அல்குர்ஆனின் முதல் மூன்று பிரதிகள் எடுக்கப்பட்டு அவை மூவருக்குக் கையளிக்கப் பட்டன. அவற்றைப் பெற்றுக் கொண்டவர்களின் பெயர்களைக் கூறுக?
3. ஸகாத் பெற அருகதையுடையவர்கள் எட்டுக் கூட்டத்தினராகப் பிரிக்கப்பட்டுள்ளனர். இவர்களுள் தங்களுக்காக அல்லது வேறு முஸ்லிம்களின் ஆகுமான காரியங்களுக்காகக் கடன்பட்டுக் கடனைத் தீர்க்க வசதியற்றவர்கள் அரபியில் எவ்வாறு அழைக்கப்படுகின்றனர்?
4. தொழுகையில் ஜம்உ, கஸ்று செய்யும் சந்தர்ப்பத்துக்கான நீண்ட பிரயாணம் ஆகக் குறைந்தது எத்தனை மைல்களாகும்?
5. ஒரே மார்க்கக் கட்டளையை அடிப்படையாகக் கொண்டு அனுப்பப்பட்ட நான்கு வேதங்களுக்கும் முன்னர் ஸுஹுபுகள் எனும் 110 வேத கட்டளைகள் ரசூல்மாருக்கு வழங்கப் பட்டன. இவற்றுள் 30 ஸுஹுபுகள் யாருக்கு வழங்கப்பட்டன?
6. ஒரே இறைவன் என்ற ஏகத்துவப் பிரசாரத்தில் பல்வேறு துன்ப நிகழ்ச்சிகளை அனுபவித்த நபி இப்றாஹிம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களின் இரு மனைவியருள் ஒருவர் அன்னை ஹாஜரா, அடுத்தவர் யார்?
7. ஒருவரிடம் 400 ஆடுகள் இருந்தால், 2 வயதுள்ள எத்தனை பெண் ஆடுகளை ஸகாத் கொடுக்க வேண்டும்?

## இரண்டாம் சுற்று (பொது அறிவு)

1. இலங்கையில் நீருக்கடியில் இயங்கும் முதலாவது அனல் மின்சார நிலையம் எங்கே அமைந்துள்ளது?
2. ஐ.நா. வின் உத்தியோகபூர்வ மொழிகள் ஐந்து உண்டு. அத்துடன் அரபு மொழியும் பொதுச் சபை, பொருளாதார மற்றும் சமூக சேவை சபையிலும் பயன்படுத்தப்படும் உத்தியோகபூர்வ மொழியாகிறது. ஐ.நா.வின் உத்தியோகபூர்வ மொழிகள் ஐந்தும் எவை?
3. இலங்கை வரலாற்றில் சோழர்களின் முதலாவது நிரந்தரத் தலைநகராக விளங்கிய நகரம் எது?
4. மறைந்த கலைஞர் கே.ஏ. ஜவாஹர் அவர்களுக்கு கௌரவப் பட்டம் சூட்டி கௌரவித்த பல்கலைக்கழகம் எது?
5. லொக்கபீ சம்பவத்தின் காரணமாக ஆகாய மார்க்கத் தடையை எதிர்நோக்கிய நாடு எது?
6. லொக்கபீ என்ற கிராமத்தின் மேலாகச் சென்ற போதுதான் விமானம் வெடித்துச் சிதறியது. லொக்கபீ என்ற கிராமம் எந்த நாட்டில் இருக்கிறது?
7. ''உலகில் கஷ்டப்படுவோர் கோடிக்கணக்கில் இருக்கும்போது ஏன் எனக்காக மட்டும் அழுகிறீர்கள்?'' என்று உயிர் பிரியும் தறுவாயில் உறவினர்களைக் கேட்ட உலகப் புகழ் பெற்ற எழுத்தாளர் யார்?
8. சிம்பாப்வே நாடு எத்தனையாம் ஆண்டில் பிரிட்டனிடமிருந்து சுதந்திரம் பெற்றது?

**விடைகள் 19 ஆம் பக்கம் பார்க்க...**

PUBLIC LIBRARY JAFFNA



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஷ்ஷெய்க் யூ.எல்.எம். ரிஸ்மி (நளீமி BA)
வளவாளர், தேசிய கல்வி நிறுவகம்

இணைக்குக.




١ .أَيْنَ الرَّجُلُ ؟
٢ .لِمَاذَا يَحْمِلُ البُنْدُقِيَّةَ؟

جَرَى خَلْفَ الأَسَدِ وَضَرَبَهُ
مَاتَ




١. مَاذَا يَفْعَلُ الأَسَدُ؟
٢. لِمَاذَا ؟

جَرَى الأَوْلَادُ لِأَنَّهُمْ شَاهَدُوا الأَسَدَ
جَرَى خَلْفَهُمْ



١. أَيْنَ يَجْلِسُ الأَوْلَادُ ؟
٢. مَاذَا يَفْعَلُونَ ؟

يَتَّجِهُ الأَسَدُ إِلَى الأَوْلَادِ
يُرِيْدُ طَعَامًا يَأْكُلُهُ



١. إِلَى أَيْنَ يَتَّجِهُ الأَسَدُ ؟
٢. مَاذَا يُرِيْدُ ؟

يَجْلِسُ الأَوْلَادُ تَحْتَ شَجَرَةٍ كَبِيرَةٍ
هُمْ يَتَنَاوَلُونَ الطَّعَام



١. لِمَاذَا جَرَى الأَوْلَادُ ؟
٢. مَاذَا فَعَلَ الأَسَدُ؟

يَتَجَوَّلُ بَيْنَ الأَشْجَارِ وَهُوَ يَصْرُخُ
هُوَ جَائِعٌ



١. مَاذَا فَعَلَ الرَّجُلُ ؟
٢. مَاذَا حَدَثَ لِلأَسَدِ ؟

الرَّجُلُ بَيْنَ الأَشْجَارِ
يَحْمِلُ البُنْدُقِيَّةَ لِأَنَّهُ يَبْحَثُ عَنِ الحَيَوَانَاتِ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


உருவுக்கு பொருத்தமான வசனங்களை இணைத்து கதையொன்றினை அமைக்குக.



١. أَيْنَ يَرْكَبُ الرَّجُلُ دَرَّاجَتَهُ ؟

٢. مَاذَا سَقَطَ مِنْهُ ؟

سَلَّمَ الضَّابِطُ الكِيْسَ لِلرَّجُلِ؟
أَخَذَ الكِيْسَ مِنَ الضَّابِطِ وَشَكَرَهُ



١. هَلْ فَتَحَ الوَلَدُ الكِيْسَ؟

٢. لِمَاذَا ؟

ذَهَبَ إِلَى مَكْتَبِ الشُّرْطَةِ لِيُخْبِرَهُمْ بِأَنَّهُ فَقَدَ كِيْسَهُ
يَقُوْلُ للضَّابِطِ إِنَّهُ فَقَدَ كِيْسَهُ ويُخْبِرُهُ بِالمَكَانِ الذِّي فَقَدَ فِيْهِ الكِيْس



١. إِلَى أَيْنَ ذَهَبَ الوَلَدُ ؟

٢. لِمَاذَا سَلَّمَ الكِيْسَ للضَّابِطِ ؟


هُوَ يَبْحَثُ عَنْ كِيْسِه
هُوَ حَزِيْنٌ لِأَنَّهُ لَمْ يَجِدْ كِيْسَهُ



١. مَاذَا يَفْعَلُ الرَّجُلُ ؟

٢. لِمَاذَا هُوَ حَزِيْنٌ ؟


ذَهَبَ الوَلَدُ إِلَى مَكْتَبِ الشُّرْطَةِ.
سَلَّمَ الكِيْسَ لِلضَّابِطِ لِيُسَلِّمَهُ الضَّابِطُ إِلَى صَاحِبِه



١. لِمَاذَا ذَهَبَ الرَّجُلُ إِلَى مَكْتَبِ الشُّرْط

٢. مَاذَا يَقُوْلُ لِلضَّابِطِ؟

لَا ، لَمْ يَفْتَحهُ.
لِأَنَّهُ وَلَدٌ أَمِيْنٌ.




١. مَاذَا سَلَّمَ الضَّابِطُ لِلرَّجُلِ ؟

٢. مَاذَا فَعَلَ الرَّجُلُ ؟

يَرْكَبُ الرَّجُلُ دَرَّاجَتَهُ فِي الشَّارِعِ.
سَقَطَ مِنْهُ كِيْسُ نُقُودِه.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Miss. Aysha Hassan

## *Assalamu Alaikum dear friends...*

Today let's learn about an important human trait that is ought to be possessed by each and every one of us as it would bring us peace of mind. Meanwhile, pay attention to the pile of vocabulary used here to enhance the richness of the writing.

Yes, without further description, let me go straight on to the matter.

"Obedience" in other words humbleness is one trait that ***adorns*** man in his best and takes him higher in his life. Allah describes "obedience" as one of the traits of that of the heaven dwellers.

Moreover, Allah never leaves a person who is obedient without raising him higher in his life.

What is the opposite of obedience my dear friends?

Yeah..."Pride".

It is mentioned in a hadith that if a person possesses pride in his heart to the extent even to that of the size of a ***mustard seed***, he would not enter paradise.

Just think over it my dear friends, how can we ever be proud? The one and only to have got the right to be proud is "Allah" (sbwt). He is the lord of the universe and we're all his slaves. We were created by him, to worship, "only him".

When you begin training yourself to be obedient, you will ***witness*** the magic working on you. You will start loving yourself and you will not have the feeling of ***guilt*** to ***torment*** you anymore. You will receive the ***absolute*** peace of mind and this very feeling would make you achieve a lot in life.

Hence, my dear brothers and sisters,

Let's be obedient to our parents, teachers, siblings, ***mentors*** and everyone who is elder to us. Remember, this trait is not one to be ignored so easily but to be hold onto tightly. For, I repeat that, this is a trait of that of the heaven dwellers. Allahu Akbar!!!

### *Vocabulary*

Adorn : Decorate

Mustard seed : A small black seed used in preparing food

Witness : See

Guilt : The feeling of having committed something wrong

Torment : Trouble

Absolute : Complete

Mentor : Guide



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Hadith of the month

The Prophet (Sallallahu 'Alaihi Wa Sallam) said, "If somebody takes some 'Ajwa dates every morning, he will not be effected by poison or magic on that day till night." (Another narrator said seven dates).

Bukhari Vol. 7 : No. 663

# *Laugh* a while:

Signboard at a clothes store "Special discounts for persons aged 85 and above" (In small print) "provide they are accompanied by their parents!"



# Birds

There are many birds in Sri Lanka. Birds have wings. Some birds like the Ostrich, Kiwi and Emu cannot fly. Some birds like the peacock have beautiful feathers.

Birds make nests to lay eggs. Birds can sing very sweetly. Some foreign birds migrate to our country during their winter season.

We love watching birds. They are so colorful. I love birds very much.

***M.N.F. Nasra***
***Grade 8***
***WP/MT/Palenda Muslim Vidyalaya***

## Your Corner



# Something important

| | |
|---|---|
| ***Limes*** | Removes toxins from the body. |
| ***Pine apple*** | Burns fat and tones the stomach |
| ***Sweet potatoes*** | Helps heal digestive issues. |
| ***Carrots*** | Purifies the blood and reduces anemia |
| ***Melo*** | Hydrates the skin and nails |
| ***Asian pear*** | Helps prevent depression and reduces anxiety |
| ***Bananas*** | Have powerful anti viral properties |
| ***Cauliflower*** | Helpful for asthma and kidney disorder |
| ***Fennel*** | Soothes pain and relives cramps and spasm |

***F.M.Mohammed Ilman***
***Grade 10***
***Walpaluwa.M.M.V***
***Galgamuwa***

- Coins always make sounds. But paper moneys are always silent. So, when your value increases keep yourself silent and humble.
- Education is not the learning of facts. But the training of the mind to think.
- it is the mark of an educated mind to be able to entertain a thought without accepting it.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# How I spend my free time



In my free time, I like to collect stamps. I started this hobby at age of seven. I like collecting stamps very much. I have many stamps and they are from various countries. My parents and my friends help me in collecting stamps. It is a very interesting hobby. Some of my friends also collect stamps. Some stamps are printed with images of great people, important and special events. Hence, they help me in my educational activities and in my life as well. It is my favorite hobby.

***M.N.F. Ishra***
***Grade 10***
***WP/MT/Pelenda M.V***
***Agalawaththa.***

LEARNING GIVES CREATIVITY, CREATIVITY LEADS TO THINKING, THINKING PROVIDES KNOWLEDGE, KNOWLEDGE MAKES YOU GREAT.


ABDUL KALAM

EDUCATION IS THE MOST POWERFUL WEAPON WHICH YOU CAN USE TO CHANGE THE WORLD.

NELSON MANDELA

# Some Points for you

- ✓ Life is not always sweet and soft. When it gives you sour lemons make a juice and enjoy it. Life without difficulties is tasteless.
- ✓ In the final days of your life you won't be asked "what your total wealth is?" but "How many poor people benefitted from your wealth?" So keep helping the poor when you live.
- ✓ Decide your future through the Al Quran and sunnah.
- ✓ You can heal a wound caused by fire but you cannot heal a pain caused by your hard words. Thus, don't allow your tongue to wag as it likes.
- ✓ Think positive. It is good for your health.
- ✓ Don't lose the best things in life in order to get the good things.
- ✓ A smile costs nothing. But it creates much.
- ✓ If you fail to plan, you plan to fail



***Shaheedh Sabeela Beham***
***A/L (2016)***
***Sinna Sippikkulam***
***vavuniya.***

I'm eagerly waiting for your contributions with comments, stories, poems and essays. The best ones will be published insha Allah.

So write to me at

**I learn every day**

A 61/ 5,
Zahira Road, Mawanella

Or

Mail me to
aharamenglish@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனைக் கதை

# உலகிலேயே அழகானது!

ஒரு சிறுவன் தன் தாயின் முகத்தைப் பார்த்து விட்டு, ''அம்மா! உங்கள் முகம் எவ்வளவு அன்பு நிறைந்ததாக அழகாக உள்ளது. உங்கள் முகத்தைப் பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும் என்று ஆசையாக உள்ளது'' என்றான். ஆனால், அடுத்த கணம் அவனது பார்வை தாயின் கைகளில் பதிந்தது. அந்தக் கைகள் தழும்புகளுடன் முறுக்கிக் கொண்டு வழக்கமான தோற்றத்தில் இல்லாதிருந்ததை அவன் கண்டான். அவன் வியப்போடு, ''என்னம்மா உங்கள் கைகள் இப்படி இருக்கின்றதே? உலகத்திலேயே அவலட்சணமான கைகள் உங்களுடையதாய்த்தான் இருக்கும், அதை பார்க்கவே எனக்குப் பிடிக்க வில்லை'' என்றான்.

இதனைக் கேட்டுக் கொண்டிருந்த தந்தை அவனை அழைத்து, ''உனக்கு ஒரு கதை சொல்லட்டுமா?'' என கேட்டார். அதற்கு அந்தச் சிறுவன் ''ஆம்'' என்று சொன்னான். பிறகு தந்தை கதையைச் சொல்லத் தொடங்கினார்:

''ஒரு காலத்தில் ஒரு சின்னக் குழந்தை இருந்தது. அது அமைதியாக தொட்டிலில் தூங்கிக் கொண்டிருந்தது. அப்போது வீடு திடீரென்று தீப்பற்றிக் கொண்டது. ''ஐயோ! குழந்தைக்கு என்ன ஆயிற்று?'' என பதறினாள் தாய். அந்தக் குழந்தையை கவனிக்க வேண்டிய தாதிப்பெண் பயந்து குழந்தையை அப்படியே விட்டு விட்டு அலறியபடி வெளியே ஓடி விட்டாள். ஆனால், நெருப்பைப் பார்த்து விட்ட தாயார் பதறியபடி குழந்தையை காப்பாற்ற ஓடி வந்தாள். அதற்குள் தொட்டிலை நெருப்பு சூழ்ந்து கொண்டதால் குழந்தையைக் காப்பாற்ற முடியாத நிலை ஏற்பட்டது. எனவே, தாய் நெருப்பை அணைக்க முற்பட்டு ஒரு வழியாக தீயை அணைத்து குழந் தையைக் காப்பாற்றி விட்டாள். அந்நேரம் அவளது கைகள் தீயினால் வெந்து போயின. காயம் குணமாக பல மாதங்கள் ஆனது. குணமானாலும் கைகள் உருக் குலைந்து முறுக்கிக் கொண்டு அவலட்சணமாக இருந்தன.''

''எவ்வளவு தைரியமான அம்மா அவர்'' என்று சிறுவன் வியந்தான். ''அந்த தாய் யார் என்று தெரியுமா?'' என அப்பா கேட்டார். அதற்கு சிறுவன் ''இல்லை'' என்றான்.

''அந்தத் தாய் உன்னுடைய தாயேதான். இப்போது நீ கூறிய சிதைந்து உருக்குலைந்த அழ கற்ற அவளது கைகள்தான் உன்னைக் காப்பாற்றின.''

உடனே சிறுவனின் கண்களில் கண்ணீர் வடிந் தது. தாயின் கைகளைப் பற்றி கண்களில் ஒற்றிக் கொண்டான். ஆவேசமாக தாயின் கைகளை முத்தமிட்டான். பிறகு சிறுவன் ''தாயே! உன் கைகள் தான் உலகத்திலேயே மிக அழகானவை'' என்று கூறி விம்மி அழுதான். பிறகு தாயும் அவனைக் கட்டி அணைத்து முத்தமிட்டாள்.

**எம்.எப்.எப். சஸ்னா**
**பாத்திமா ஸஹ்றா பெ.அ.க.**
**ஓட்டமாவடி**

---

**அறிவுக் களஞ்சியம்...**

**13 ஆம் பக்கத் தொடர்... விடைகள் (இஸ்லாம்)**

1. அஹ்லுல் பத்ரத்
2. ஹஸரத் அபூபக்ர் (ரழியல்லாஹு அன்ஹு)
   ஹஸரத் உமர் (ரழியல்லாஹு அன்ஹு)
   அன்னை ஹப்ஸா (ரழியல்லாஹு அன்ஹு)
3. ஆரிமீன்    4. 55 1/2 மைல்
5. நபி இத்ரீஸ் (அலைஹிஸ்ஸலாம்)
6. அன்னை சாரா    7. 4

**பொது அறிவு**

1. கொழும்பில்
2. சைனீஸ், ஆங்கிலம், பிரஞ்சு, ரஷ்யன், ஸ்பனிஷ்
3. பொலன்னறுவை
4. கிழக்குப் பல்கலைக்கழகம்
5. லிபியா    6. ஸ்கொட்லாந்தில்
7. டால்ஸ்டாய்    8. 1980

---

## எண்ணங்களின் வண்ணங்கள் - 16

**தலைப்பு: நீர் வளத்தைப் பாதுகாப்போம்**

- உங்களது சித்திரம் A4 தாள் அளவில் அமைதல் வேண்டும்.
- சித்திரங்களுக்கு பயன்படுத்தும் வர்ணம் 'சோக் கலர்' ஆக இருத்தல் வேண்டும்.
- சிறந்த மூன்று படைப்புகளுக்கு பெறுமதியான புத்தகம் வழங்கப்படுவ துடன் பாராட்டைப் பெறும் சித்திரங்களும் அகரத்தில் பிரசுரிக்கப்படும்.

**அனுப்ப வேண்டிய இறுதித் திகதி: 2016 நவம்பர் 20**

அனுப்ப வேண்டிய முகவரி:
அகரம்சஞ்சிகை, 77, தெமட்டகொட வீதி,
கொழும்பு 09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை வரலாற்றில் முஸ்லிம்களின் பங்களிப்புக்கள்

தொடர் - 13

## போர்த்துக்கேயர் காலப் பிரிவில் முஸ்லிம்கள்

அஷ்ஷெய்க் எம். நவாஸ் சனூர்டீன் (நளீமி MA)
உதவி அதிபர்
க/அல்மனார் தே.பா. ஹந்தெஸ்ஸ
வளவாளர், தேசிய கல்வி நிறுவகம்

முஸ்லிம்களின் ஒத்துழைப்போடு கள்ளிக் கோட்டை அரசுடன் சீதாவாக்கை மன்னன் மாயாதுன்னை உருவாக்கிக் கொண்ட அரசியல் இராஜதந்திர உறவுகள் போர்த்துக்கேயருக்கு எதிராக மாயாதுன்னை மேற்கொண்ட போர்களுக்கு பக்கபலமாக அமைந்தன. இந்த வகையில், சமோரினின் தளபதிகளாக இருந்த பக்க மரிக்கார், குஞ்சலி மரிக்கார், அலி இப்ராஹீம் ஆகியோர் ஒரு கப்பற் படையுடன் இலங்கை வந்தனர். இவர்களது ஒத்துழைப்போடு நடத்திய கடற் போர்களில் மாயாதுன்னை தோல்வியைத் தழுவினாலும் அவனுக்கும் முஸ்லிம்களுக்குமிடையே நிலவிய உறவுகள் பாதிப்படையவில்லை.

முஸ்லிம்கள் மாயாதுன்னைக்கும் அவனது மகனான முதலாம் இராஜசிங்கனுக்கும் நல்கிய உதவிகளை போர்த்துக்கேய வரலாற்று ஆசிரியர் குவ்ரோஸ் மிக்க வெறுப்புணர்வோடு பதிவு செய்திருக்கிறார். இதில் சிங்கள மன்னர்களின் படையில் துப்பாக்கி வீரர்களாக அவர்கள் பணி புரிந்தமை பற்றிய குறிப்பு முக்கியமானதாகும்.

போர்த்துக்கேயர்கள் எப்போதும் முஸ்லிம்களைப் பகைத்து நடந்து கொள்ளவில்லை. சிலபோது முஸ்லிம்கள் அவர்களது பலவீனங்களைப் பயன்படுத்தி தமது வணிக முயற்சிகளை வலுப்படுத்திக் கொண்டனர். போர்த்துக்கேயருக்கும் முஸ்லிம்களுக்குமிடையிலான உறவுகள் பற்றிய வரலாற்றுக் குறிப்புகளைப் படிக்கும்போது அவர்கள் முஸ்லிம்களைப் பொறுத்தவரையில் கடைப்பிடித்த கொள்கை கள் எப்போதும் ஒரே மாதிரியாக இல்லாமல் இருந்ததைக் காண முடிகின்றது. சிலபோது தமது சுயநலன்களுக்காக முஸ்லிம்களுக்கு சலுகைககள் வழங்கியும் சிலபோது முஸ்லிம்களுடன் மிகக் கடுமையாகவும் நடந்து கொண்டுள்ளனர்.

எனினும், பொதுவாக அவர்கள் முஸ்லிம்களுடன் மிகக் காழ்ப்புணர்வோடு நடந்து கொண்டமைக்கான சான்றுகளே அதிகம் உள்ளன. குறிப்பாக, முஸ்லிம்கள் இலங்கையில் வணிக வலிமை பெற்றவர்களாக விளங்கியமையும் கண்டி இராச்சியத்தின் வணிக முயற்சிகளுக்கு அதிக ஒத்துழைப்பு நல்கியமையும் போர்த்துக்கேயரின் காழ்ப்புணர்வைத் தூண்டக் காரணிகளாக அமைந்தன. எனவே, முஸ்லிம்களை ஒடுக்குவதற்கான முயற்சியில் போர்த்துக்கேயர் கவனமெடுத்தனர். *1597-1600* வரையான காலப் பகுதியில் போர்த்துக்கேய அதிபதியாக இலங்கையில் பணி புரிந்த விடிகூரியா இலங்கையில் இருந்து முஸ்லிம்களை வெளியேற்றும்படி கட்டளையிட்டான். ஆனால், அதனை உறுதியாக நடைமுறைப்படுத்த முடியவில்லை.

எனினும், 17 ஆம் நூற்றாண்டின் ஆரம்பக் கூறுகளில் முஸ்லிம்களைப் பற்றிய தமது கொள்கையில் மாற்றங்களைக் கொண்டு வந்தனர். *1613* ஆம் ஆண்டு கோவாவில் போர்த்துக்கேய வைஸ்ரோயாக பணி புரிந்த உடாம் ஜெரனீமோ டி அஸ்விடோ *1613* முதல் இரண்டு பருவப் பெயர்ச்சிக் காற்றுகளுக்கிடையில் மட்டும்தான் முஸ்லிம் வணிகர்கள் இலங்கையில் தங்க முடியுமென்றும் அதனை மீறுவோர் மரண தண்டனைக்கு உட்படுத்தப்படுவர் என்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டளை பிறப்பித்தான். தென்னிந்திய முஸ்லிம் வணிகர்கள் கொழும்பில் தங்குவதைத் தடுப்பதே இதன் பிரதான நோக்கமாகும். 1615 ஆம் ஆண்டு போர்த்துக்கேய மன்னன் முஸ்லிம்களுக்கு வழங்கியிருந்த சகல சலுகைகளையும் நீக்கும்படியும் முஸ்லிம்கள் எவரும் புதிதாக நாட்டில் நுழைய அனுமதிக்கக் கூடாதெனவும் கட்டளையிட்டான். இந்த சிக்கல்களுக்கு மத்தியிலும் முஸ்லிம்கள் கரையோரப் பகுதிகளில் தமது வணிக முயற்சி களை மிகத் திறமையாக மேற்கொண்டதாக பேராசிரியர் அபேசிங்ஹ குறிப்பிடுகிறார்.

போர்த்துக்கேயரின் காணிப் பதிவு ஆவணமான 'தோம்பு' தரும் தகவல்களின்படி 16, 17 ஆம் நூற்றாண்டுகளில் புத்தளம், சிலாபம், மாதம்பை, நீர்கொழும்பு, கொழும்பு, களுத்துறை, மக்கொன, பேருவள, பய்யாகல, அளுத்கம முதல் மாத்தறை வரையான கரையோர நகர்களில் கணிசமான முஸ்லிம்கள் வாழ்ந்துள்ளமையைக் காண முடிகின்றது. 1614 ஆம் ஆண்டில் சிலாபம், நீர்கொழும்பு, களுத்துறை ஆகிய நகர்களின் தலைமை அதிகாரிகளாக முஸ்லிம்கள் இருந்துள்ளனர். அளுத்கம பிரதேச நகரத் தலைவர் மிகப் பலமிக்க சக்தியாக இருந்ததை போர்த்துக்கேய குறிப்புகள் காட்டுகின்றன. நீர்கொழும்பிலும் வெலிகமையிலும் முஸ்லிம்களுக்கு என்று பிரத்தியேக வீதிகள் இருந்தன. கொழும்பிலும் இத்தகைய வீதிகள் இருந்தன. இன்று பழைய சோனகர் தெரு, புதிய சோனகர் தெரு என இவை அழைக்கப்படுகின்றன. இக்காலப் பிரிவில் கொழும்பு ஒரு மஸ்ஜிதைக் கொண்ட பிரதான முஸ்லிம் நகராகத் திகழ்ந்தது. இத்தகவல்கள் அனைத்தையும் போர்த்துக்கேய வரலாற்று ஆசிரியர் குவ்ரோஸ் தருகிறார்.

இக்காலப் பகுதியில் இலங்கையின் வேறு பகுதிகளிலும் முஸ்லிம் குடியிருப்புகள் காணப்பட்டன. பானகமுவ, கண்டி நகரம், ஹிங்குல, மாவனல்லை, கம்பொள, யாழ்ப்பாணம் முதலிய பகுதிகளிலும் முஸ்லிம் குடியிருப்புகள் கணிசமாக நிலவின. இவை இக்காலப் பிரிவுக்கு முந்திய பாரம்பரியக் குடியிருப்புகளாகும் என பேராசிரியர் அபேசிங்ஹ குறிப்பிடுகிறார்.

போர்த்துக்கேயர் காலப் பிரிவில் பிரதான நிர்வாகப் பதவிகள் சிலவற்றையும் முஸ்லிம்கள் வகித்துள்ளனர். புத்தளத்துக்கும் முல்லைத் தீவுக்கும் இடைப்பட்ட பகுதியை ஒரு முஸ்லிம் வன்னியர் ஆட்சி செய்ததாகவும் அது சுதந்திரப் பிரதேசமாக திகழ்ந்ததாகவும் இந்த வன்னியர் வருடத்துக்கு ஏழு யானைகள் வீதம் போர்த்துக்கேயருக்கு வழங்க இணங்கியிருந்ததாகவும் பேராசிரியர் அபேசிங்ஹ குறிப்பிடுகிறார். அவ்வாறே போர்த்துக்கேயர் நிர்வாகத்தில் அரச அதிகாரிகளாகவும் கணக்காளர்களாகவும் கிராமத் தலைவர்களாகவும் முஸ்லிம்கள் இருந்துள்ளனர்.

இக்காலப் பிரிவில் முஸ்லிமகள் பாக்கு, வாசனைத் திரவியங்கள், யானைகள் முதலியவற்றை இந்தியத் துறைமுகங்களுக்கு கொண்டு சென்றனர். பின் அங்கிருந்து பருத்தி, அரிசி, பட்டு, கருவாடு முதலியவற்றை இங்கு எடுத்து வந்தனர். போர்த்துக்கேய வரலாற்றாசிரியர் குங்ரோஸ் தரும் இக்குறிப்புகள் முஸ்லிம்கள் ஏற்றிறக்குமதி வணிகத்தில் பின்பற்றிய கொள்கைகளைக் காட்டுகின்றன. எனினும், பல நூற்றாண்டு களாக முஸ்லிம்கள் செய்து வந்த வணிகத்தில் ஒரு தொய்வு நிலவுவதை போர்த்துக்கேயக் குறிப்புக்கள் காட்டுகின்றன.

PUBLIC LIBRARY
JAFFNA





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை



# தான் விரும்பியது...

✍ ருஷ்தா பின்த் ஜவ்ரியா
கெகுணகொல்ல தே.பா.

நோன்புப் பெருநாளைக்கு இன்னும் கொஞ்ச நாட்களே எஞ்சியிருந்தன. அந்த கொஞ்ச நாட்களும் பெருநாள் உடுப்பு வாங்குவது, தின்பண்டங்கள் செய்வது என்று இதர வேலைகளில் கழிந்து விடக் கூடாது என்ற முன் ஏற்பாட்டில் எல்லாவற்றையும் ஆரம்பத்திலேயே செய்து விட்டிருந்தாள் ராஹிலா.

இந்த ரமழானின் இறுதிப் பத்தில் லைலதுல் கத்ர் இரவின் முழுமையான பயனைப் பெற்றிட வேண்டும் என்ற பேராசையில் ஒவ்வொருவரது உள்ளமும் அலைக்கழிந்து கொண்டிருக்க, ராஹிலா மட்டும் அதற்கு விதி விலக்காகவா இருக்கப் போகிறாள்? லைலதுல் கத்ர் இரவின் கண்ணியத்தை சுவைத்திட வேண்டும் என்ற வேட்கையில் தனது முழு நேரத்தையும் இறைவனுக்காகவே அவள் கழித்துக் கொண்டிருந்தாள்.

''உம்மா...'' அவளது கடைசி மகள் கத்திக் கொண்டே ஓடி வந்தாள்.

''ஏன் மகள்...?'' அவளை கட்டியணைத்து முத்தமிட்டபடி கேட்டாள் ராஹிலா.

''நான் விரும்புறத எப்பிடியும்மா என்ட சகோதரனும் விரும்புற...?'' என்றாள். ''நான் விரும்புறத ஏண்ட சகோதரனும் விரும்பாத வரைக்கும் ஒருவர் உண்மையான முஸ்லிமா இருக்க ஏலாது என்டு முஅல்லிமா சொல்லி தந்தாங்க... நாங்க உண்மையான முஸ்லிமா இருந்தாதானே சுவர்க்கத்துக்கு போக ஏலும்...'' மகளின் மழலை கலந்த மொழியை ரசித்துக் கொண்டே இறைவனைப் புகழ்ந்தாள் அவள். ''யா அல்லாஹ்! என்னுடைய புள்ளைகள மார்க்கப்பற்றுள்ளவர்களாக வளரச் செய்திடு...'' என்று வழமையாக கேட்கும் அதே துஆவை இப்போதும் அவளது நாவு மொழிந்து கொண்டது.

''நாங்க எத விரும்புறோமோ அததாம்மா மத்தவங்களுக்கும் கொடுக்கணும்...'' குழந்தைக்கு விளங்கும் மொழியில் விளக்கம் சொல்லிவிட்டு குர்ஆனை ஓத ஆரம்பித்தாள் ராஹிலா.

சூரியன் தனது அனற்கரங்களால் பூமியை தாக்கிக் கொண்டிருந்தான். பெரும்பாலும் நாளை பெருநாளாக இருக்கலாம் என்பதுதான் எல்லோரது ஊகமாகவும் இருந்தது. பெருநாளைக்கான ஆடைகளையெல்லாம் எடுத்து 'அயன்' செய்து ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்தாள் ராஹிலா.

அவளது பக்கத்தில் வந்து நின்ற கடைசி மகள் சுமையா ஒவ்வோர் ஆடையாக தொட்டுப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தாள்.

''உம்மா இது ஏன்ட தானே...'' அவளது வாப்பம்மா வெளிநாட்டிலிருந்து சுமையாவிற்கென அனுப்பியிருந்த நீல நிற 'கவுனை' அணைத்தபடி கேட்டாள்.

நீல நிறத்தில் மின்னிக் கொண்டிருந்த அந்த ஆடை ராஹிலாவின் கண்களை அள்ளியெடுத்தது.

''ஓ மகள்! இது உங்கடதான். நாளைக்கு பெருநாள் தொழப் போற நேரம் போட்டுக் கொண்டு போங்க...'' கனிவாகச் சொல்லி ஆடையை வாங்க முயன்றபோது சுமையா மறுத்து விட்டாள்.

''உம்மா இத நானே வெச்சிக் கொள்றேனே...'' சிணுங்கியபடி சொல்லிக் கொண்டு ஆடையைக் கெட்டியாக பிடித்துக் கொண்டாள்.

''பரவாயில்லை... ஆசை முடிய அவளாகவே வைத்து விடுவாள்தானே...'' என்று அவள் பாட்டில் விட்டு விட்டு தனது வேலையை கவனிக்கத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தொடங்கினாள் ராஹிலா. மகள் சுமையா ஆடையை தொட்டு, அழகு பார்த்து, இரசித்துக் கொண்டிருந்தாள். பெருநாளன்று அந்த ஆடையை அணிவித்து அழகு பார்க்க வேண்டுமென்று ராஹிலாவின் மனம் துடித்தது. அந்தளவு அழகான 'கவுன்' அது.

நேரம் மூன்று மணியை கடந்து கொண்டிருக்க, பசியின் வாட்டத்தால் சோர்ந்து போய் அமர்ந்திருந்தாள் சுமையா. எல்லா நோன்புகளையும் நோற்றுவிட வேண்டுமென்ற அவளது ஆசை உணவின் நினைவைக் கூட ஏற்படுத்தவில்லை.

பக்கத்து வீட்டு சரீனா ஸலாம் சொல்லிக் கொண்டு உள்ளே வந்தாள். பாவம் இளம் வயதிலேயே விதவை ஆகிவிட்டாள். அவளது கணவன் திடீரென மரணமானபோது அவள் நான்கு குழந்தைகளுக்கு தாயாகி இருந்தாள். அவளது முகம் கவலையில் சோர்ந்து போயிருந்தது. மன ஆறுதலுக்காக ராஹிலாவுடன் வந்து கதைத்துச் செல்வது வழக்கம்.

''என்ன சரீனா பெருநாள் வேலையெல்லாம் முடிஞ்சிரிச்சா...?'' ராஹிலா சிரித்துக் கொண்டே கேட்டாள். அவள் பதில் சொல்ல முன் கண்ணீர் முந்திக் கொண்டது. முந்தானையால் துடைத்து கட்டுப்படுத்த சிரமப்பட்டுக் கொண்டிருந்தாள். ''ஏன் சரீனா அழுவுறீங்க...?'' சரீனா கண்ணீரோடு பதிலளித்தாள், ''இந்தப் பெருநாளைக்கி புள்ளைகளுக்கு உடுப்பு வாங்கல தாத்தா. கையில சல்லியே இல்ல...'' கண்ணீர் துளிகள் வார்த்தையை பின்தள்ளின.

உடனே அலுமாரியில் இருந்த நல்ல ஆடைகள் சிலவற்றை பையில் போட்டு கைகளில் கொடுத்தபோது மகிழ்ச்சியில் கரங்கள் நடுங்க ஏந்திக் கொண்டாள்.. பக்கத்தில் சுமையா நின்றிருந்தாள். சரீனா கதவு வழியே வெளியேற சமையலறையை நோக்கி நகர்ந்தாள் ராஹிலா. ''உம்மா நான் சரீனா மாமி வீட்டுக்கு பொய்ட்டு வாறேன்...'' வாசலில் நின்று உரக்கக் கத்தினாள் சுமையா. ''சரி மகள் பாங்கு சொல்ல முன்னுக்கு வந்திடுங்க...'' ராஹிலாவின் குரல் கேட்டதோ இல்லையோ அவள் சிட்டாக பறந்திருந்தாள்.

''அல்லாஹு அக்பர்... அல்லாஹு அக்பர்...'' தக்பீர் சப்தம் பெருநாள் பிறந்து விட்ட செய்தியை சந்தோஷமாக அறிவித்துக் கொண்டிருந்தது. எல்லோரும் நாளைய தினத்தை எதிர்பார்த்தவர்களாக நித்திரையில் ஆழ்ந்தனர்.

ராஹிலா அதிகாலையிலேயே எழுந்து கடையாப்பம் செய்ய ஆரம்பித்தபோது ஒவ்வொருவராக எழுந்து வர ஆரம்பித்தனர். எல்லோரும் குளித்துவிட்டு வர நேரம் ஆறு மணியைக் கடந்து கொண்டு இருந்தது. சின்னவள் சுமையா கடைசியாக குளித்துவிட்டு வந்து நின்றாள். ''உம்மா எனக்கும் உடுப்ப மாத்தி விடுங்களே...'' ராஹிலா அலுமாரியைத் திறந்து சுமையாவின் நீல நிற புத்தாடையை தேடிக் கொண்டிருந்தாள். அதைக் காணவில்லை. அவளிடமிருந்து வாங்கி அலுமாரிக்குள் வைத்தது எங்கே போனது...? சிந்தனையோடு ஒவ்வொருவரும் மூலை முடுக்கெல்லாம் தேட ஆரம்பித்தனர். நேரமும் தன்பாட்டில் கடமையுணர்வோடு செயற்பட்டுக் கொண்டிருந்தது.

இன்னும் கொஞ்ச நேரத்திற்குள் பெருநாள் தொழுகை ஆரம்பமாகி விடும். சுமையாவின் நீல நிற புத்தாடையை தேடித் தேடி அலுத்துப்போய் நின்றிருந்தாள் ராஹிலா. சுமையாவின் முகத்தில் எந்தவொரு சலனமும் இருக்கவில்லை. தற்செயலாக ராஹிலாவின் கண்கள் யன்னல் வழியே பாதையே நோக்கின. நீல நிறத்தில் மின்னிக் கொண்டிருந்த ஆடையுடன் சரீனாவின் கடைசி மகள் அவளது கைகளைப் பற்றியபடி சந்தோஷமாக பள்ளிவாசலை நோக்கி நடப்பது தெரிகிறது.

ராஹிலா சுமையாவை பார்க்கிறாள். ''அது எனக்கு மிச்சம் விருப்பம் உம்மா...'' சுமையா சாதாரணமாகச் சொன்னாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




"எதற்கும் நாம் சளைத்தவர்கள் அல்ல'' என உரத்து முழங்கும் பல சாதனையாளர்களை நாம் தினமும் சந்தித்துக் கொண்டுதான் இருக்கிறோம். எம்மால் முடியவே முடியாது என நாம் தயங்கும் விடயத்தை இந்த உலகில் யாரோ மந்தகாச புன்னகையுடன் செய்து கொண்டுதான் இருக்கின்றார்கள். அவ்வாறான சாதனையாளர்கள் நமக்கு விட்டுச் செல்லும் விடயம் ஒன்றுதான்;

நம் மத்தியிலுள்ள இரண்டு இளம் சாதனையாளர்களுடான சந்திப்புக்களில் பகிர்ந்து கொண்ட கருத்துக்களை எதிர்கால சாதனையாளர்களான உங்களுக்காக தொகுத்துத் தருகிறோம்.

✍ **அயாத் அஹமட்**

**அகரம்: உங்களைப் பற்றிய ஓர் அறிமுகத்தை முன்வைக்கலாமா?**

யூனுஸ்கான்: எனது தந்தை மீரா மொஹிதீன்; தாய் ஆமினா. இரண்டு சகோதரர்கள் இருக்கின்றார்கள். வாழைச்சேனையை சேர்ந்த நான் மட்/அந்நூர் தேசிய பாடசாலையில் க.பொ.த. (சாதாரண தரம்) கற்றுக் கொண்டிருக்கிறேன்.

நப்லாஸ்: தந்தையின் பெயர் ரஷீத்; தாயின் பெயர் சின்னப்புள்ள. சகோதரி ஒருவரும் இரண்டு சகோதரர்களும் இருக்கிறார்கள். விஞ்ஞான பிரிவில் கற்க வேண்டும் என மிக நீண்ட காலமாக விருப்பம் இருந்தாலும் குடும்ப பொருளாதார சூழ்நிலை காரணமாக மட்/ அந்நூர் தேசிய பாடசாலையில் தொழிநுட்பவியல் பிரிவில் முதலாம் வருடத்தில் கற்றுக் கொண்டிருக்கிறேன்.

**அகரம்: இந்த கண்டுபிடிப்பு பற்றி கூறுங்களேன்...?**

கருவிகள் மனிதனின் வேலைகளை இலகுவாக்க உருவாக்கப் படுகின்றன. அவ்வாறான நோக்கத்துடன் இந்த நெற்தூற்றும் இயந்திரத்தைக் கண்டுபிடித்திருக்கிறோம். இன்னொரு வகையில் சொல்லப்போனால் விவசாயத்தில் ஒரு புரட்சியை ஏற்படுத்த வேண்டும் என்பதே எமது கண்டுபிடிப்பின் இலக்காகும்.

வயிற்றுக்கு சோறிட்டு வாழ வைப்பது விவசாய தொழில். ஆனால், நாளுக்கு நாள் நவீன கண்டுபிடிப்புக்களால் உலகம் புதுப்பிக்கப்படும் இந்நாட்களில் கூட விவசாயிகளுக்கு உறுதுணையாக கண்டுபிடிப்புக்கள் பெரிதாக கண்டுபிடிக்கப்படவில்லை.

## "முயற்சி செய்ய வேண்டியது முடியுமான வரை அல்ல; மூச்சு உள்ள வரை"






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த சிந்தனைதான் இந்த கண்டுபிடிப்புக்கு வழிகோலியது. இந்த நெற்தூற்றும் இயந்திரத்தால் சேற்றில் இறங்காமல் வயலில் நின்றவாறே நெல் மணிகளை விசிறலாம். சுமார் 5 மீற்றர் வரையான தூரம் வரை இந்த இயந்திரத்தால் நெல் மணிகளை விசிறலாம். அதேபோல, சேற்றில் இறங்காமலேயே பசளையும் விசிறலாம்.

விவசாயிகளுக்கு உறுதுணையாக அமைய வேண்டும் எனவும் விவசாயத்தில் ஒரு புரட்சியை உருவாக்க வேண்டும் என்றுதான் இந்த கண்டு பிடிப்பை நிகழ்த்தினோம். திடீரென நிகழ்ந்த ஒரு விபத்தல்ல இது. திட்டமிட்டுத்தான் இதை உருவாக்கினோம்.

முதல் தடவை இந்தக் கண்டுபிடிப்பை மாகாண போட்டிகளுக்கு மாத்திரமே கொண்டு செல்ல முடிந்தது. ஆனால், இவ்வருடம் எமது கண்டுபிடிப்பில் இன்னும் சில மாற்றங்களை சேர்த்து தேசிய மட்டம் வரை கொண்டு வந்துள்ளோம். அதேவேளை, இக்கருவியை விவசாயிகள் இலகுவாக பயன்படுத்தும் வகையில் இன்னும் சில மாற்றங்களைச் செய்யவும் உத்தேசித்துள்ளோம்.

இந்த கண்டுபிடிப்பை உருவாக்குவதற்கு எமக்கு ஆயிரம் ரூபாயை விட குறைவான தொகையே செலவாகியது. பெரும்பாலும் கழிவுப் பொருட்களை பயன்படுத்தித்தான் இதை உருவாக்கியுள்ளோம்.

**அகரம்: எப்படி இந்த துறைக்குள் உள்நுழைந்தீர்கள்?**

**நப்லாஸ்:** இயல்பிலேயே விஞ்ஞானம் எனது ஆர்வத்திற்குரிய தேடலாகவும் பொழுது போக்காக வும் இருந்தது. சிறிய வயதிலேயே துவிச்சக்கர வண்டியை நவீனகரமாக மாற்றுவது பற்றி பல யோசனைகளை வகுத்துக் கொண்டிருந்தேன். அதன் இன்னோர் அபிவிருத்தியடைந்த கட்டமாகத்தான் இந்தக் கண்டுபிடிப்பு அமைகிறது.

**யூனுஸ்கான்:** எனது தந்தை இயல்பிலேயே மின்பொறியியலாளர். அதனால் இத்துறை பற்றிய சூழல் இயல்பிலேயே எனக்கு அமைந்திருந்தது. அது மாத்திரமின்றி, ஜம்இய்யா நடத்திய குறிமுறை ஆக்கம் மற்றும் இயந்திரவியல் பயிற்சிப் பட்டறை (coding and robotic games) பயிற்சிநெறியில் கலந்து கொண்டபோது இதுவே எனது துறை என தீர்மானித் துக் கொண்டேன்.

**அகரம்: அடுத்த கண்டுபிடிப்பு பற்றி என்ன இலக்கை வைத்திருக்கிறீர்கள்?**

**நப்லாஸ்:** வீதிகள் விதியை முடித்து கொள்ள அல்ல. ஆனால், இன்று நாளாந்தம் கேள்விப்படும் விபத்துக்களையும் அதில் அகப்பட்டு கோரமாக உயிரிழக்கும் மக்களையும் பார்க்கும்போது உள்ளம் பதறுகிறது. இந்த விபத்துக்களுக்கு முக்கிய காரணி களில் தம்மை அறியாமல் தூக்கத்தில் மூழ்கி விடுவ தும் முக்கிய காரணியாகும். ஆகவே, இதற்கு முடிவு கட்டும் வகையில் சாரதிகள் தம்மை அறியாமல் தூங்கி விடும்போது அவர்களின் தூக்கத்தை கலைக்க ஏதாவது யுக்தியொன்றை கண்டுபிடிக்க முயன்று கொண்டிருக்கிறேன்.

**யூனுஸ்கான்:** அதேபோல, சாரதிகளுக்கு மிக வும் இடைஞ்சலாக உள்ள மற்றொரு விடயம் சூரிய ஒளியாகும். அது கண்கூச செய்வதாலும் ஏகப்பட்ட விபத்துக்கள் நடக்கின்றன. விபத்துக்கள் இல்லா விட்டாலும் நேரடியாக சாரதிகளின் கண்களை தாக்கும் சூரிய ஒளி மிகப் பொரும் சவால்தான். அத்துடன், கறுப்பு நிற ஸ்டிக்கர்களை வாகனங்களில் ஒட்டுவதை இலங்கை அரசாங்கம் தடை செய்துள்ளது. ஆகவே, அதற்கு மாற்றீடாகவும் சாரதிகளை சூரிய ஒளி தாக்கத்தில் இருந்து பாதுகாக்கவும் ஏதாவது பயன்தரு விடயத்தை கண்டுபிடிக்கலாம் என திட்டமிட்டுள்ளேன்.

**அகரம்: இந்த சாதனைகளுக்காக நீங்கள் நன்றி சொல்ல விரும்புவது...**

**யூனுஸ்கான்:** அல்லாஹ்வே அனைத்துக்கும் போதுமானவன். பெற்றோர், நண்பர்கள், ஆசிரியர்கள் என நன்றி சொல்ல வேண்டிய நிறையப் பேர் இருக்கிறார்கள். அத்துடன், எனது நண்பனும் உறவினருமான காலித் எனக்கு மிகவும் பக்கபலமாக இருந்தார்.

ஜம்இய்யா நான் விசேடமாக நன்றி செலுத்த வேண்டிய மாணவர் அமைப்பு. வெற்றி பெற்று பிரகாசிக்க விரும்புபவர்கள் ஜம்இய்யாவுடன் இணைந்திருக்க வேண்டும் என விரும்புகிறேன்.

**நப்லாஸ்:** ஆற்றல்களை அருட்கொடைகளாக தந்த அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். அதேபோல, எமது பெற்றோர் எமக்கு பல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கிய நண்பர்கள், ஆசிரியர்கள் எல்லாருமே எமது நன்றிக்குரியவர்கள்.

PUBLIC LIBRARY
JAFFNA



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரான்ஸ்
# France

ஐரோப்பாவின் கீர்த்திமிகு நாடுகளில் பிரான்ஸ் முக்கியமானது. ஐரோப்பாக் கண்டத்தில் மாத்திரமன்றி, உலக வரலாற்றிலும் பிரான்ஸ் நாட்டினால் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

பிரான்ஸ் அறுகோணி வடிவத்தில் அமைந்துள்ளது. பெல்ஜியம், ஜேர்மன், சுவிட்ஸர்லாந்து, லக்சம் பேர்க், இத்தாலி, மொனாகோ, அன்டோரா, ஸ்பெயின் ஆகியன பிரான்ஸ் தேசத்தின் அண்டை நாடுகளாகும்.

**உலகை ஆண்ட கீர்த்திமிகு தேசம்**

கடந்த 500 ஆண்டுகளாக உலகின் பண்பாடு, பொருளாதாரம், படைத்துறை, அரசியல், அறிவியல், அழகியல் போன்றவற்றில் பிரான்ஸ் கணிசமான பங்களிப்புச் செலுத்துகின்றது. 17, 18 ஆம் நூற்றாண்டுகளில் வட அமெரிக்கா, தென்கிழக்கு ஆசியா போன்ற பகுதிகளில் அமைந்திருந்த நாடுகளைக் கைப்பற்றத் துவங்கிய பிரான்ஸ் 20 ஆம் நூற்றாண்டில் உலகில் மிகப் பெரிய இரண்டாவது குடியேற்றவாத பேரரசாக விளங்கியது.

**இன்றைய பிரான்ஸின் மகத்துவம்**

உலக சுகாதார அமைப்பு பிரான்ஸை உலகின் மிகச் சிறந்த பொது சுகாதார வசதிகளை வழங்கும் நாடாக கௌரவித்துள்ளது. திரட்டிய வீட்டுச் செல்வ அடிப்படையில் பிரான்ஸ்தான் ஐரோப்பாவில் மிகப் பெரிய செல்வந்த நாடாகும்.

ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபையின் நிரந்தர உறுப்பினரான பிரான்ஸ் வீட்டோ அதிகாரத்தைக் கொண்டுள்ளது. மேலும், உலகில் அங்கீகரிக்கப்பட்ட 8 அணுசக்தி நாடுகளில் பிரான்ஸும் ஒன்றாகும். பிரான்ஸ்தான் உலகில் அதிக சுற்றுலாப் பயணிகளைக் கவரும் நாடு. (ஆண்டுக்கு 82 மில்லியன்)



அதிபர்
பிரான்சுவா ஒல்யாந்து



பிரதமர்
பேன்சுவல் வால்சு

| | |
|---|---|
| நலைநகரம் | பாரிஸ் |
| ஆட்சிமொழி | பிரெஞ்சு |
| அரசாங்கம் | ஒற்றையாட்சி |
| பரப்பு | 674843 Km$^2$ |
| சனத்தொகை | 63,587,700 (2006) |
| நாணயம் | யூரோ |

**பிரான்ஸ் தேசத்தின் முன்மாதிரி**

சூழலுக்கான அமைச்சு ஒன்றை உருவாக்கிய (1971) முதல் நாடுகளுள் பிரான்ஸும் ஒன்றாகும். அத்துடன், 2020 ஆம் ஆண்டிற்குள் காபனீரொட்சைட் வெளியேற்றத்தை பெருமளவு கட்டுப்படுத்த பல நடவடிக்கைகளை இந்நாடு மேற்கொள்கிறது. 9 தேசிய பூங்காக்களையும் 46 இயற்கை பூங்காக்களையும் கொண்டுள்ள பிரான்ஸ், ஐரோப்பாவிலேயே அதிகமாக இயற்கை வள செயற்பாடுகளை மேற்கொள்ளும் நாடுகளில் முக்கியமானதாகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வதேச வறுமை ஒழிப்பு தினம்

17.10.2016 சர்வதேச வறுமை ஒழிப்பு தினம் அனுஷ்டிக்கப்பட்டது. இத்தினம் முதன் முதலாக 1987 ஆம் ஆண்டு பிரான்ஸின் பாரிஸ் நகரைச் சேர்ந்த ஜோசப் ரெசின்கி என்பவரால் அறிமுகம் செய்யப்பட்டது.


இன்று உலகளாவிய ரீதியில் 129 கோடி மக்கள் வறுமையில் வாடுகின்றனர். 100 கோடி பேர் சுத்தமான குடிநீர் இன்றி திண்டாடுகின்றனர். இந்த மக்களைப் பாதுகாக்கும் முகமாகவே வறுமை ஒழிப்பு தினம் அனுஷ்டிக்கப்படுகிறது.

## Brics கூட்டமைப்பின் ஒன்றுகூடல்



வளர்ந்து வரும் ஐம்பெரும் நாடுகளின் கூட்டமைப்பான Brics அமைப்பின் எட்டாவது மாநாடு கோவாவில் 15.10.2016 இல் தொடங்கியுள்ளது. பிரேஸில், ரஷ்யா, சீனா, தென்னாபிரிக்கா, இந்தியா ஆகிய அதீத சக்திவாய்ந்த இந்நாடுகளில் மாத்திரம் உலக சனத்தொகையில் 50% பேர் வாழ்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஆபத்தில் ஆசியா



ஆசியாவில் அதிகளவானோர் ஸிகா வைரஸிற்கு பலியாகும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரித்துள்ளது. பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் இடம்பெற்ற உலக சுகாதார ஸ்தாபனத்தின் வருடாந்த மாநாட்டிலேயே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.




தொகுப்பு: வ. முஹம்மத் நபீல்

## இலங்கை பெண்மணிக்கு கௌரவம்




ஐ.நா. தலைமையகத்தில் நடைபெறவுள்ள 4 ஆவது உலகளாவிய கௌரவ அதிகாரிகள் விருது வழங்கும் வைபவத்தில் இலங்கையைச் சேர்ந்த திருமதி. ஞானம்பிகை அல்லிராஜா விருதைப் பெறவுள்ளார். தெற்காசிய பெண்மணி ஒருவர் இவ்விருதைப் பெற இருப்பது இதுவே முதல் தடவையாகும்.


அநாதைகள், விதவைகள் ஆகியோருக்கு உதவும் மிகச் சிறந்த மனிதநேய பணியாளர்களுக்கே இவ்விருது வழங்கப்படுகின்றது. 2010 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் 'ஞானம்' தொண்டு நிறுவனத்தை உருவாக்கிய திருமதி. ஞானம்பிகை பல்வேறு நாடுகளில் உள்ள அப்பாவி மக்களுக்கு மிகப் பெரும் சேவைகளைச் செய்துள்ளார்.

## வயம்ப பல்கலைக்கழகத்திற்கு மருத்துவ பீடம்

வயம்ப பல்கலைக்கழகத்திற்கு மருத்துவ பீடம் லபுயாய பிரதேசத்தில் அமைக்கப்பட ஏற்பாடாகியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தாய்லாந்தின் சோகம்

தாய்லாந்தில் மிக நெடுங்காலமாக ஆண்டு வந்த மன்னர் பூமி போல் அதுல்யா தேஜி இறந்ததைத் தொடர்ந்து அந்நாடு சோகத்தில் மூழ்கியுள்ளது. முடிக்குரிய இளவரசர் மாஹா வஜிரா லொங் கோன் தனக்கு முடிசூட ஒரு வருட அவகாசம் கேட்டுள்ளார்.

## இலங்கையில் எச்.ஐ.வி. தொற்று 10 வீதத்தால் அதிகரிப்பு

நாட்டில் எச்.ஐ.வி. தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 10 வீதம் வரை அதிகரிப்பதாக சுகாதார அமைச்சின் பாலியல் நோய்கள் தடுப்புத் திட்டத்தின் பணிப்பாளர் வைத்தியர் சிசிர லியனகே தெரிவித்துள்ளார்.

## 2016 ஆண்டுக்கான நோபல் பரிசு




அமெரிக்க கவிதை உலகின் புதிய பரிமாணத்தை ஏற்படுத்தியதற்காக பாடலாசிரியர் பாப் டிலனுக்கு இலக்கியத்திற்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது. தத்துவம், அரசியல், சமூகம் சார்ந்த தொனிப்பொருள்களை தனது கவிதைகளுக்கான கருவாக பயன்படுத்தும் இவர் ஏற்கனவே கோல்டன் குளோப், கிராம்மி விருதுகளையும் வென்றுள்ளார்.

## ஐ.நா. சபையின் புதிய செயலாளர்



ஐ.நா. சபையின் புதிய செயலாளர் நாயகமாக Antonio Gutevres தெரிவாகியுள்ளார். ஐ.நா.வின் ஒன்பதாவது செயலாளரான இவர், போர்த்துக்கல் நாட்டைச் சேர்ந்த பிரபல அரசியல்வாதியாவார்.

## சூழல் மாசடைவின் கேந்திரங்களாக சீனா மற்றும் இந்தியா



சீனா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளின் வளிமண்டலப் பகுதி கவலையளிக்கும் விதத்தில் மாசடைந்திருப்பதாக விண் வெளியில் அதிக காலம் தங்கியிருந்தவர் என பெருமை பெற்ற விண்வெளி வீரர் ஸ்காட் கொல்வி தெரிவித்துள்ளார்.

2015 ஆம் ஆண்டு சீனாவில் நிலக்கரி சுரங்கங்கள் மூடப்பட்டிருக்கும் காலப் பகுதியில் மாத்திரம்தான் சீனாவின் வளிமண்டலப் பகுதி சற்று கலக்கமற்று தெளிவாகத் தெரிந்ததாக தெரிவித்த அவர், குறிப்பிட்ட இந்த இரு நாடுகளும் வளியை பாதுகாப்பதில் கூடிய கரிசனை செலுத்த வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08ஆம் பக்கத் தொடர்...

அக்காகம் இறந்துபோன மற்றொரு காகத்தை மண்ணில் புதைத்தது. அப்போதுதான் இறந்த பிணத்தை மண்ணில்தான் புதைக்க வேண்டுமென்ற உண்மையை மனிதன் உணர்ந்தான். இதுகால வரையும் அப்படித்தான் செய்து வருகின்றான். இது காகம் மனிதனுக்குக் கற்றுத் தந்த முதல் பாடம்.

அல்லாஹ்வின் படைப்பில் ஏராளமான ஜீவராசிகள் இருக்கும்போது, காகத்தை ஏன் அல்லாஹ் தேர்ந்தெடுத்தான்? காரணம் பறவை இனங்களில் காகத்திற்கு மட்டுமே அறிவுத் திறனும் புத்திக் கூர்மையும் அதிகம். எனவேதான், அதனை வைத்து அல்லாஹ் மனிதனுக்குப் பாடம் நடத்தினான்.

பின்னர் தம் சகோதரரின் பிரேதத்தை (அடக்குவதற்காக) எவ்வாறு மறைக்க வேண்டுமென்பதை அவருக்கு அறிவிப்பதற்காக அல்லாஹ் ஒரு காகத்தை அனுப்பினான். அது பூமியை தோண்டிற்று. (இதைப் பார்த்த) அவர், ''அய்யோ! நான் இந்த காகத்தினளவு கூட (அறிவு) இல்லாதவனாகி விட்டேனே! அப்படியிருந்திருந்தால் என் சகோதரனுடைய பிரேதத்தை நான் மறைத்திருப்பேனே'' என்று கூறி கைசேதப்படக் கூடியவராகி விட்டார். (அல்குர்ஆன் 5:27,31,32)

மனிதன் இன்றி மற்றைய பிராணிகளால் உயிர் வாழலாம். ஆனால், மற்றைய பிராணிகள் இன்றி மனிதனால் ஒருபோதும் உயிர் வாழ முடியாது.

---

சிந்தனைக் கதை

# ஏழைகளுக்காகவே வாழ்ந்தவர்

நடு இரவில் கத்தியுடன் ஜோதிராவ் ஃபுலேயின் வீட்டிற்குள் இருவர் நுழைந்தனர். ஏதோ சப்தம் கேட்பதைப்போல் தூக்கத்தில் உணர்ந்த ஜோதிராவ் எழுந்தார். சிறு விளக்கினைக் கையில் ஏந்தி, ''யார்?'' என வினவினார். வந்த இருவரும், ''உங்களைக் கொலை செய்ய வந்திருக்கிறோம்'' என்றனர். ''உங்களுக்கு நான் ஏதேனும் கெடுதல் செய்துள்ளேனா'' என்றார்.

''இல்லை'' என்று சொல்லிவிட்டு, ''உங்களைக் கொல்லச் சொல்லி எங்களைச் சிலர் அனுப்பியுள்ளனர்'' என்றனர்.

''இதனால் உங்களுக்கு என்ன இலாபம்?'' என்றார் ஜோதிராவ். ஒவ்வொருவருக்கும் 1,000 ரூபாய் கொடுப்பதாகச் சொல்லியுள்ளனர் என்றனர்.

உடனே ஜோதிராவ், ''எனது மரணம் உங்களுக்கு இலாபம் கொடுக்கும் என்றால் உங்களுக்கு முன்பு வந்து நிற்கிறேன், என்னைக் கொல்லுங்கள். எந்த ஏழை மக்களுக்காக நான் ஊழியம் புரிந்தேனோ, எந்த ஏழை மக்கள் நன்றாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறேனோ அவர்களாலேயே நான் கொல்லப்படுவதைப் பெருமையாகவே நினைக்கிறேன்.


ஏழைகளுக்காகவே வாழ்ந்தேன். என் மரணம் மூலம் ஏழைகளுக்குப் பலன் கிடைக்கிறது என்றால் அமைதியாக, கவலை, வேதனையின்றி மகிழ்ச்சியாகவே என் மரணத்தை ஏற்றுக் கொள்கிறேன்'' என்றார்.

தங்கள் தவறினை உணர்ந்த இருவரும் அவரின் காலில் விழுந்தனர். ''இப்படிப்பட்ட நல்ல மனம் படைத்த ஒருவரைக் கொல்லச் சொன்ன அந்த எதிரியைக் கொன்று வருகிறோம், அனுமதி கொடுங்கள்'' என்றனர். இதனைக் கேட்ட ஜோதிராவ், ''இங்கு நடந்ததை யாரிடமும் சொல்லக் கூடாது. யாரிடமும் விரோதமும் கூடாது. அவர்கள் நீண்ட காலம் வாழட்டும்'' என்றார். வந்த இருவருக்கும் என்ன செய்வதென்றே தெரியவில்லை. பின்பு, ரோடி என்பவன் பாதுகாவலனாக ஜோதிராவிடம் சேர்ந்தான். கும்பர், படித்துப் பண்டிதனாகி, அவரது உண்மை நாடுவோர சங்கத்தின் தூணாகச் செயற்பட்டான். அடிமைத்தனம் பற்றிய புத்தகம் எழுதி ஜோதிராவின் கொள்கையைப் பரப்பினான்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தரம் 6-11

தொடர் : 14

# தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்

எம்.எப்.எம். பாஹிம் B.A, PGDE (Merit),RICTP,MEd
(ஆசிரிய ஆலோசகர்)
வளவாளர், தேசிய கல்வி நிறுவகம்
கணினி யுகம் சஞ்சிகையின் ஆசிரியர்

## சொல்முறைப்படுத்தல் மென்பொருள் (Microsoft word) பற்றி அறிந்து கொள்வோம்

**பாடம் 08**


சென்ற இதழ் தொடர்ச்சி

நாம் இதுவரை சொல்முறைப்படுத்தல் மென்பொருளை கணினியில் திறந்து கொள்வது பற்றியும் அதன் tab கள் பற்றியும் அதில் அடங்கியுள்ள Group கள் பற்றியும் Group களில் உள்ள பொத்தான்கள் பற்றியும் விளக்கமாக கற்றோம். அத்துடன், பொத்தானில் அழுத்துகின்றபோது நாம் செயற்படத் திறந்து வைத்துள்ள worksheet இல் ஏற்படும் மாற்றங்கள் பற்றியும் கற்றோம்.


*படி 06*

### முதல் தடவையாக ஆவணம் (document) ஒன்றை சேமித்தல் (Save) செய்தல்

முதல் தடவையாக ஓர் ஆவணம் ஒன்றை சேமிக்கின்றபோது Office பொத்தானை அழுத்தி save என்றதில் click செய்தல் வேண்டும். *(படம்-08)* அப்போது கீழே காட்டப்பட்டுள்ளதைப் போன்று ஒரு dialog box காட்சி தரும். *(படம் - 09)*




*(படம் 08)*




*(படம் 09)*

இதன்போது கவனத்திற் கொள்ள வேண்டிய அம்சங்கள் மூன்று காணப்படுகின்றன:

*01. எவ்விடத்தில் நாம் செய்த ஆவணத்தை சேமிப்பது?*

*02. என்ன பெயரில் சேமிப்பது?*

*03. எந்த முறையில் சேமிப்பது ? என்பனவாகும்.*

### கோப்பு முகாமைத்துவம்

கணினிக் கற்கையில் கோப்புக்களை முகாமை செய்தல் என்ற பகுதி மிக முக்கியமானதாகும். கணினியின் வன்தட்டு அதிகூடிய கொள்ளளவுகளைக் கொண்டுள்ளதனால் குறிப்பான இடம், குறிப்பான பெயர் இன்றி சேமிக்கும் ஆவணங்களை மீண்டும் பெற்றுக் கொள்வது என்பது காலத்தை விரயப்படுத்தும் செயலாகும். இவ்வாறு செயற்படுவதானது கோப்பு முகாமைக்கு முரணாகும். அதற்குப் பதிலாக சேமிக்கும் ஆவணம் எந்த drive இல் எந்த கோப்பில் அமைய வேண்டும் என்பதையும் அதற்காக எப்பெயர் வழங்கப்பட வேண்டும் என்பதையும் நாம் ஆவணத்தினை உருவாக்கும் போதே திட்டமிட்டுக் கொள்தல் வேண்டும். அப்போது எமது கோப்புக்களை முகாமை செய்வதற்கு இலகுவாக அமையும்.


### சேமிக்கும் முறை (Type)

மைக்ரோசெப்ட் வேட் இல் சேமிப்பதற்கான பதினாறு முறைகள் காணப்படுகின்றன. Word Document, Word Macro- Enabled Document, Word 97-2003 Document, Word Template, Word Macro –Enabled Template, ·word 97-2003 Template, PDF, XPS Document, Single File Web Page, Web Page, Web Page, Filtered, Rich Text Format, Plain Text, Word XML Document, Word 2003 XML Document,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Works 6.0 – 9.0 ஆகிய முறைகளில் சேமித்துக் கொள்ள முடியும். ஒவ்வொரு முறையும் வெவ்வேறு நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படுகின்றது. *(படம் - 10)*





*(படம் 10)* *(படம் 11)*

PDF type இல் ஓர் ஆவணம் சேமிக்கப்படும் போது காட்சி தரும் window படம் 11 இல் காட்டப்பட்டுள்ளது.


**இரண்டாவது தடவையாக அதே ஆவணத்தில் சேமித்தல் (Save) செய்தல்**


நாம் சேமித்த ஆவணத்தில் மீண்டும் செயற பாடுகளைச் செய்துவிட்டு திரும்பவும் அவற்றை சேமிக்கும்போது ஏற்கனவே குறிப்பிட்டதைப் போன்று (படம் 08) Office பொத்தானை அழுத்தி save என்றதில் click செய்தல் வேண்டும். ஏற்கனவே அதற்கான பெயர், இடம் என்பன வழங்கப்பட்டுள்ளதால், ஏற்கனவே சேமிக்கப்பட்ட ஆவணத்தில் புதிதாக எழுதியவையும் சேமிக்கப்படும்.

படி 07

**ஆவணத்தினை (document) வேறோர் இடத்தில் சேமித்தல் (Save) செய்தல்**

ஏலவே செய்து கொண்டிருந்த ஆவணத்தை வேறோர் இடத்தில் சேமிப்பதாக இருந்தால் Office பொத்தானை அழுத்தி save as என்றதில் click செய்தல் வேண்டும். *(படம் - 12)* இதன்போதும் இடம், பெயர், முறை பற்றி கவனத்துடன் செயற்படல் வேண்டும்.





*(படம் 12)* *(படம் 13)*

படி 08

**ஆவணத்தினை (document) ஓடச் செய்தல் (Scroll bar)**

ஆவணம் பல பக்கங்களைக் கொண்டிருப்பின் அவ்வாவணத்தை ஒரே திரையில் காண்பது சிரமம் என்பதனால் அப்பக்கங்களை ஓடச் செய்ய முடியும். அதற்காக scrolling bar பயன்படுகின்றது. மேலுள்ள அம்புக்குறியினை சொடுக்குவதன் மூலம் பக்கதினை மேல் கொண்டு செல்ல முடியும். அதேநேரம், அதனை அழுத்திப் பிடித்துக் கொண்டு இருப்பதன் மூலம் வேகமாக பக்கங்களைக் கடக்கவும் முடியும். இதே ஒழுங்கிலேயே கீழ் உள்ள அம்புக்குறியும் தொழிற்படும். எனினும், இரண்டு அம்புக்குறிகள் இணைந்த பொத்தான் ஒரே தடவையில் முதல் பக்கத்திற்குச் செல்வதற்கும் கடைசிப் பக்கத்திற்குச் செல்வதற்கும் பயன்படும்.

*(படம் - 13)*

படி 09

**ஆவணத்தில் செருகும் புள்ளியை (Insertion Points) இனை அசையச் செய்தல்**

| | |
|---|---|
| வலதிற்கு அல்லது இடதிற்கு ஓர் எழுத்தை விடுத்து நகர்த்தல் | ← or → |
| மேல் அல்லது கீழ் நோக்கி ஒரு வரியை விடுத்து நகர்த்தல் | ↓ or ↑ |
| வலதிற்கு அல்லது இடதிற்கு ஒரு சொல்லை விடுத்து நகர்த்தல் | ctrl + ← or ctrl + → |
| மேல் அல்லது கீழ் நோக்கி ஒரு பந்தியை விடுத்து நகத்தல் | ctrl + ↓ or ctrl + ↑ |
| வரியின் ஆரம்பத்திற்கு அல்லது முடிவிற்குச் செல்லல் | Home or End |
| ஆவணத்தின் ஆரம்பத்திற்கு அல்லது முடிவிற்குச் செல்லல் | Ctrl+Home or Ctrl + End |
| அடுத்த அல்லது சென்ற திரைக்குச் செல்தல் | Page Up or Page Down |
| ஆவணத்தின் மேல் அல்லது கீழ் நிலைக்கு நகருதல் | Alt+ctrl+page up or Alt + ctrl + page Down |

PUBLIC LIBRARY JAFFNA



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கானல் நீரும் கற்பனைக் கோட்டையும்

எமது வெற்றிக்கும் தோல்விக்கும் காரணமாக அமையும் விடயங்கள் பல. அதில் முக்கியமானதும் ஜெயிக்க வேண்டுமெனில், களையப்பட வேண்டியதுமான ஒரு விடயத்தை இம்முறை பார்ப்போம். அதனை குறிப்பிட்ட ஒரு வார்த்தையில் சொல்வதை விட விளக்கமாகச் சொன்னால்தான் சரியாகப் புரிந்து கொள்ளலாம்.

***1. வீண் கற்பனை***

ஒன்றைப் பற்றி நாம் கற்பனையாக, நாமாக ஒன்றை நினைத்து அதன் காரணமாக அதனை செய்யாமலிருத்தல் அல்லது செய்வதற்கு தயங்குதல்.

***2. முன்-தீர்மானமும் முன்-அனுபவமும்***

குறிப்பிட்ட ஒரு விடயம் தொடர்பான முன்-முடிவுகளிலிருந்து தீர்மானம் எடுத்தல் அல்லது உங்களதும் பிறரதும் முன்னைய அனுபவங்களிலிருந்து முடிவு எடுத்தல் ஒரு விடயத்தைப் பற்றிய முன்-முடிவு அல்லது வீணான கற்பனை அல்லது தவறான அனுபவம் காரணமாக அந்த விடயத்தில் முயற்சி செய்யாமல் இருப்பது தோல்விக்கான பிரதான காரணங்களுள் ஒன்றாகும்.

மைக்ரோசொப்டின் பிரதான நிறைவேற்று அதிகாரியாக சத்ய நாதெல்லா பணிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டபோது, அவருக்கு முன்னர் பணியாற்றிய பால்மரிடம் ''முன்னையவர்களிடமிருந்து நான் கற்றுக் கொள்ள வேண்டிய பாடம் என்ன?'' என்று கேட்டபோது, பால்மர் சொன்னார்: ''யாருக்குத் தேவை முன்னையவர்களின் பாடமெல்லாம். புதிதாகப் பாருங்கள்; புதிதாக யோசியுங்கள்; புதிதாகச் செய்யுங்கள்.''


முன்னையவர்களின் வாழ்விலிருந்து பாடங்கள் படிக்க வேண்டும்தான். எனினும், புத்தாக்கம் என்ற விடயத்தைப் பொறுத்தவரை அது தவிர்க்கப்பட வேண்டும், ஏனெனில், அது முயற்சியைத் தடுத்து விடும். எல்லா அனுபவங்களும் எமக்குரியதல்ல. அனுபவம் என்பது பொதுவான விதி கிடையாது. ஆளுக்காள் மாறுபடும்; முயற்சிக்கு ஏற்ப பயன் தரும்.

பிறரது அனுபவம்போல நாமாக ஒன்றைக் கற்பனை பண்ணி மிகப் பெரிய தடையை ஏற்படுத்தும் கைங்கரியத்தை பல சந்தர்ப்பங்களில் கனகச்சிதமாகவே செய்து விடுகின்றோம். ''அது அப்படியிருக்குமோ! இப்படியிருக்குமோ! அப்படி செய்தால் இப்படி நடக்குமோ! இப்படி நடந்தால் என்ன செய்வது!!!'' என்று எம்மை நாமே குழப்பி, குழம்பி விடுவோம். அதுதான் நாமே இட்டுக் கொள்ளும் தடுப்புச் சுவர்.

உதாரணமாக, எவரெஸ்ட் மலையில் மிக விரைவாக ஏறி சாதனை புரிவதென வைத்துக் கொள்வோம். ''எவரெஸ்டில் ஏறுவதா? இடையில் சறுக்கி விழுந்தால், உணவு-நீர் முடிந்துவிட்டால், குளிர் தாங்க முடியாவிட்டால், ஏற முடியாமல் போய்விட்டால், நோய்வாய்ப்பட்டு விட்டால்...'' என்று தொடரும் எமது வீணான கற்பனைகளுக்கு நாம்தான் முடிவு கட்ட வேண்டும்.

சில விடயங்கள் முடியாது என்று முன்-தீர்மானிக்கப்பட்டிருக்கும். அவை, எப்போதுமே முடியாதவை அல்ல. மனிதனால் பறக்க முடியாது என்ற முன்-தீர்மானமும் பறப்பதற்கான தொடர் முயற்சிகளும் நாம அறிந்த கதையே!

***ஜே.எம். அஸீம் ( நளீமி )***





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றுமோர் உண்மை என்னவென்றால், வெளியிலிருந்து நாம் கற்பனை செய்தவற்றிற்கு நேர்மாற்றமாகவும் பல சந்தர்ப்பங்கள் நிறைந்ததாக வும் அந்த விடயத்தை நாம் உள்ளே நுழைந்தபோது கண்டு கொள்ளலாம்.

''இன்ஜினியராவதா...? எனக்கு கணக்கே சரியா வராது...''

''டாக்டராவதா...? எனக்கு எதுவுமே நினை வில் நிற்பதில்லையே...''

''எழுத்தாளராவதா...? என் கையெழுத்தே சரியில்லை...''

''தொழில்நுட்பத்துறையா...? அதற்கெல்லாம் தனித்திறமை வேண்டுமே...''

இப்படி எதற்கும் நீங்கள் தடுப்புச் சுவர் கட்ட வேண்டாம். மற்றவர்கள் உங்கள் இலட்சியங்களுக்கு தடுப்புச் சுவர் கட்டவும் நீங்கள் அனுமதிக்க வேண்டாம். இந்த இரண்டும் முக்கியம்.

வர்த்தக உலகில் தனியிடம் பிடித்துள்ள பத் திரிகையான போர்ப்ஸின் தலைமை ஆசிரியராக இருந்த மால்கம் போர்ப்ஸ், பல்கலைக்கழகத்தில் கற்கும்போது அங்கு வெளியான பத்திரிகைக் குழுவில் சேர்த்துக் கொள்ள மறுக்கப்பட்டவராவார்.

அவரவர் பார்வைக்கேற்ப ஒவ்வொன்றும் பொலிவு பெறும். சாதாரண மீனவன் ஒருவனின் கையில் கிடைத்த பல கோடி பெறுமதியான முத்து பல நாட்களாக அவனது வீட்டு மூலையில் கவனிப்பாரற்றுக் கிடந்தது. முத்தின் பெறுமதியறிந்த ஒருவன் அவ்வீட்டுக்குள் நுழைந்து அதனைக் கண்டபோது அதிர்ந்தே போனான். அதனை அரசாங்கத்திடம் ஒப்படைத்ததும் அரசாங்கம் கௌரவித்து பல லட்சங்களை அன்பளிப்பாக அளித்தது. சாதாரண மீனவனின் பார்வையில் முத்தும் மீனாகிப் போனது.

எதையும் புதிதாகப் பாருங்கள். முன்-தீர்மா னங்கள், முன்-அனுபவங்கள், வீணான கற்பனைகள் உங்கள் பார்வையைப் பாதிக்காதவாறு பார்த்துக் கொள்ளுங்கள். உங்கள் ஆழ்மனதுக்கு அவகாசம் கொடுங்கள். அது சொல்வதை செவிமடுங்கள்.

மற்றவர்கள் சென்ற பாதையும் அவர்களின் காலடித் தடங்களும் எப்போதும் உங்களுக்கு வழிகாட்டலாக அமையாது. கண்மூடித்தனமாக மற்றவர்களைப் பின்பற்றுவதைக் கைவிடுங்கள். உங்களுக்கான தனித்துவமான பாதையை உங்கள் தனித்துவமான பார்வை மூலம் கண்டறியுங்கள்.

நான் சொல்வதை நீங்கள் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும். 'வழிகாட்டல்கள் தேவை இல்லை, அனுபவங்களில் பாடங்கள் இல்லை...' என தவறாக அர்த்தப்படுத்திக் கொள்ளாதீர்கள். நீங் கள் தனித்துவமானவர், உங்கள் பார்வை தனித்து வமானது, உங்கள் பாதையும் தனித்துவமானது என்ற விடயத்தை அழுத்தம் திருத்தமாக உங்கள் மனதில் இருத்துங்கள். மாறாக, மற்றவர்களிடமிருந்து இரவல் வாங்கி அவற்றைப் பயன்படுத்தாதீர்கள்.

**இவற்றை மனதில் கொள்ளுங்கள்**

- நீங்கள் தனித்துவமானவர். உங்கள் தனித்துவம் உங்கள் கைகளில்
- நீங்கள் மற்றவர் அல்ல; மற்றவர்களின் முன்-முடிவுகள் முடிவான முடிவுகள் அல்ல
- எந்தவொரு விடயத்திற்கும் வீணான கற்பனை களால் முற்றுப்புள்ளி வைக்க வேண்டாம்.
- எந்தவொன்றிற்குள் நுழைய முன்னரும் அத னைச் சுற்றி பல தடுப்புச் சுவர்கள் போடப் பட்டிருக்கும். அதனூடாகப் பார்க்கின்றபோது தவறான பார்வை-பிழையான முடிவாக அமைய வாய்ப்புண்டு. எனவே, அதனுள் நுழைந்து பாருங்கள். உண்மையை உணருங்கள்.

கடலில் மூழ்கித்தான் முத்தெடுக்க வேண்டும். முத்தின் பெறுமதி உணர்ந்தவன் மூச்சையடக்கி மூழ்கத்தானே செய்கிறான். அவன் சாவதற்காக வாழவும் இல்லை; வாழ்வதற்காக சாகவும் இல்லை.

''முடியாது, சாத்தியமில்லை...'' என உலகமே கூறிய விடயங்களைத்தான் இன்று சாத்தியமாக்கிக் கொண்டிருக்கின்றனர். சாரதி இல்லாத வாகனம் எமது பாதைகளில் பயணிக்க உள்ள காலம் வெகுதொலைவில் இல்லை. சாத்தியமில்லை என்று சொன்ன விடயங்கள் சாதனைகளாகிக் கொண்டிருக்கின்றன.

யதார்த்தங்களை உணருங்கள். சிலபோது இந்த விடயம் உங்களுக்கு புரிந்து கொள்ள கடினமாக இருக்கலாம். ஆனால், வாழ்வில் முக்கியமான பாடம் இது. இரண்டு மூன்று முறை வாசியுங்கள். மனதில் நன்கு பதித்துக் கொள்ளுங்கள். யதார்த்தத்தை உணரும்போது சாதிக்க உதவும். தடைகள் தகர்த்தெறிந்து பயணிக்க உதவும்.

உங்கள் இலட்சியம் அந்த தடுப்புச் சுவர் தாண்டி இருந்தால் எட்டாக்கனி என ஏக்கம் கொள்ள வேண்டாம். நம்பிக்கையோடு தடை களைத் தாண்டுங்கள். இலட்சியக் கனவு இனிதாக வாழ்த்துக்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2016 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சாதனை படைத்த மாணவச் செல்வங்கள்

## கே/மா/ பதுரியா மத்திய கல்லூரி, மாவனல்லை



எம்.ஆர்.எப். அஸ்கா
192


எம்.என்.எம். அர்கம்
176


ஏ.ஆர்.எம். அம்மார்
175


எம்.ஆர்.எப். அம்னா
173


எம்.என். நுஹா
171


எம்.இஸட்.எப். ஹூதா
171


எம்.என்.எம். ஹகம்
171


எம்.ஆர். சாரா
170


ஏ.என். மரியம்
170


எம்.ஆர்.எம். மாஜித்
168


எம்.எச். ஹகீமா
168



எம்.ஆர். ஸம்ஹா
167


டி.எப்.என். நஸ்ருன்
166


ஆர்.எம். ஹப்ஸா
166


எம்.எப். ரெசீன் அஹா
166



எம்.என்.எப். சிம்லா
166



எம்.எம்.எப். ஹம்தா
165


எம்.ஐ.எம். நஸ்ஹான்
165


எம்.ஐ.எம். இமாஸ்
165


எம்.எச். மரியம்
164


எம்.ஐ.எப். இப்ரா
164


எஸ். ஆமினா
164


எம்.ஐ.எம். அம்மார்
163



எம்.ஆர். அஹமட்
163


எம்.எப்.எப். யுஸ்ரா
162


எம்.என்.எப். நுஹா
162


எம்.ஆர்.எம். ஹமீம்
161


எம்.ஏ.எப். அப்ஹா
161


எம்.ஏ. லப்ரி
160


எம்.எச். திக்ரா
160



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


எம்.என். உமர்
160


ஆர்.எம். ரிஹாம்
160


எம்.எம்.ஏ. சுரைப்
159


யூ.எப். நூரா
158


எம்.ஆர்.எப். ஹிஸ்மா
157


எம்.ஆர். ஆஇஷா
156


எம்.என்.எம். உகாஸா
156


எம்.ஐ.எப். ஹப்ஸா
155


எம்.என்.எம். ராசித்
155


எம்.ஏ. அஸ்பா
155


எம்.என்.ஏ. ஆதிப்
154


எம்.ஐ. அப்ரா
154

## கு/இப்/ அந்நூர் மத்தியக் கல்லூரி, பாணகமுவ


எம்.என்.எப். சஹ்லா
173


எம்.ஏ. ஆஇஷா
169


எம்.கே.என்.எப்.
ஆதிகா - 166


எம்.எஸ்.எம்.
ஹஸ்ஸான் - 162


ஏ. பவித்ரன்
160


எம்.எப்.பீ. அப்ரா
158


என்.எம். ருகைய்யா
157


எம்.ஏ. நாதியா
157


எம்.என்.எப். ஹப்ஸா
155


எம்.எப். முனா
156


எம்.டீ. ஹாஜரா
156


எம்.எப். மனால்
153


எம்.என். நதீர்
153

## பு/ ரிஷாத் பதியுதீன் மகா வித்தியாலயம், அல் காஸிமி, சிடி பாலாவி


எம்.எச்.எப். ஹம்தா
161


ஆர்.எப். ரொஸானா
160


பீ.எப். அஸீமா
158


எம்.யூ.எப். ஷும்ரா
155



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொ/அல் ஹிக்மா கல்லூரி, கொழும்பு 12


எம்.எஸ்.எப். சியாரா
172


எம்.ஜே.எப். ஜியாசா
164


எம்.ஆர்.எம். ரஹீம்
164


எஸ். சுஹா
160


எம்.என்.எப். சமா
159


ஏ.ஏ. சஹ்தியா
158


எம்.எச். ஆகில்
அஹமட் - 156


எம்.என்.எம். நவீட்
156


எம்.எப். மிஸ்கா
155


ஏ.ஐ.எப். இஹ்ஸானா
154

## கொ/ அல்ஹிதாயா மு.ம.வி, கொழும்பு 10


எம்.ஏ. அம்மார்
166


எம்.என்.ஏ. முஹ்ஸி
164


எம்.ஐ. ஹாத்திமா
153


## கிரி/ குரீகொடுவ சுலைமானியா மு.ம.வி, பஹமுன



எம்.டீ. அப்லல்
162 (2015)



ஆர்.எம். ரயான்
160


எச்.பி. ஹப்லா
155

## பு/ உளுக்கப்பள்ளம் மு.ம.வி, பாலாவி


எம்.என். நஹ்தீர்
165


என்.எம். முஆத்
162


ஏ.ஆர். அப்லல்
அஹமட் - 156


எம்.டீ. புஸ்ரா
153


## கிரி/ மும்மானை முஸ்லிம் வி, மும்மானை



எம்.எம். சுஊத்
179


எப். சபிய்யா
157


ஈமான் ஹனீன்
154

## கிரி/ அறக்கியால மு.ம.வி, கெகுணகொல்ல


எம்.ஆர்.எம். உமைர்
160


எஸ்.எம். சிம்ஹான்
156





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பு/ எருக்கலம்பிட்டி முஸ்லிம் மகா வித்தியாலயம், நாகவில்லு, பாலாவி



ஐ.எப். இஸ்மா
166



எம்.ஆர்.எப். சஹ்ஹாமா
164


ஐ.எப். இஸ்தா
161


ஏ.எச்.எம். இமாத்
153


எம். நபாஸ் அஹமட்
152


எம்.யூ. அஹ்தா
பஷாரத் 151


ஆர்.எம். அயாஸ்
151

## மட்/ மீரா பெண்கள் தே.பா, காத்தான்குடி


எம்.எம். பாத்திமா
ஹயாம் - 176

## பு/கற்/ பள்ளிவாசல்துறை மு.ம.வி, கற்பிட்டி


எஸ். சிம்ஹா
163


எம்.ஏ. அமானி
153

## கு/இப்/ தெலம்புகல்ல மு.ம.வி, தொடங்கஸ்லந்த


எம்.ஐ. நுஸைர்
அஹமட் - 157


எம்.இஸட். ஆதில்
155

## மே/கம்/ அசோகா கனிஷ்ட வி, கலஹிடிஹேன


எம்.என்.ஏ. நவீட்
161

## பு/கட்/ கொய்யவாடி மு.ம.வி, கற்பிட்டி


எஸ.எம்.எம். அரபாத்
155

## அனு/ அந்நூர் மு.ம.வி, இக்கிரிகொல்லாவ


எம்.எப். ருகைய்யா
ஷாரா - 162

## பு/ ஆலங்குடா முஸ்லிம் ம.வி, ஏத்தாளை


எம்.ஏ.எப். அப்லா
158

## பு/ கண்டல்குழி மு.ம.வி, கற்பிட்டி


எம்.ஐ. அயானா
151


**அகரம்** சஞ்சிகையை
தொடராகப் பெற்றுக்கொள்ள...
தொடர்புகளுக்கு:
சகோ. கே.பி. அஸ்மல் கான்
**077 698 4202**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகரம் ஸ்போர்ட்ஸ்



விரைவு - உயர்வு - துணிவு

## உலக கபடி சம்பியனாக இந்தியா




உலக கபடி சம்பியனாக மீண்டும் இந்திய அணி தெரிவு செய்யப்பட்டுள்ளது. 19.10.2016 அன்று ஈரானுடன் நடந்த இறுதிப் போட்டியில் 38-29 என்ற புள்ளிகள் வித்தியாசத்திலேயே இந்திய அணி இந்த கௌரவத்தைப் பெற்றது.

## துப்பாக்கி சுடும் போட்டியில் மைக்கல் அசத்தல் வெற்றி

இத்தாலியில் இடம்பெறும் உலக கோப்பை துப்பாக்கி சுடும் போட்டியில் ஆண்களுக்கான 50 மீற்றர் ரைபிள் புரோன் பிரிவில் அமெரிக்காவின் மைக்கல் டாரீபன் முதலிடத்தைப் பெற்று தங்கத்தை வென்றுள்ளார்.

## முதல் முதலாக சர்வதேச பயோனிக் போட்டிகள்

பரா ஒலிம்பிக் என்பது உடல் அங்கவீனமானவர்களுக்காக உருவாக்கப்பட்ட ஒலிம்பிக் போட்டிகள் என்பது நாம் அனைவரும் அறிந்த விடயமாகும். அதேபோல, உடல் உறுப்புக்களை இழந்தவர்களுக்கு இலத்திரனியல் செயற்கை உறுப்புக்களைப் பொருத்தி விளையாட்டில் ஈடுபடுத்தும் பயோனிக் போட்டிகள் முதன் முதலாக இவ்வருடம் சுவிஸில் நடைபெற உள்ளன. உலகம் முழுவதும் இருந்து சுமார் 65 குழுக்கள் இப்போட்டிகளில் கலந்து கொள்கின்றன.

## சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் அதிக வெற்றிகளைப் பெற்ற நாடாக அவுஸ்திரேலியா தொடர்ந்தும் முதலிடம்




| நாடுகளின் பெயர் | போட்டிகள் | வெற்றி | வெற்றி வீதம் |
|---|---|---|---|
| அவுஸ்திரேலியா | 888 | 547 | 64.42 |
| தென்னாபிரிக்கா | 564 | 348 | 64.05 |
| பாகிஸ்தான் | 866 | 457 | 54.36 |
| இந்தியா | 900 | 455 | 53.25 |
| மே.இ. தீவுகள் | 744 | 376 | 52.77 |
| இங்கிலாந்து | 677 | 328 | 50.76 |
| இலங்கை | 777 | 365 | 49.46 |

## தெற்காசிய நீர்நிலை போட்டிகளில் இந்தியா முதலிடம்

இந்தியா, இலங்கை, பங்களாதேஷ், பாகிஸ்தான் ஆகிய நாடுகள் பங்கேற்ற தெற்காசிய நாடுகளுக்கான நீர்நிலைப் போட்டிகளில் 86 தங்கப் பதக்கங்களுடன் இந்தியா முதலிடத்தை பெற்றது. இலங்கை 16 தங்கப் பதக்கங்களுடன் இரண்டாம் இடத்தை தக்க வைத்தது.

| | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| இந்தியா | 83 | 56 | 13 | 152 |
| இலங்கை | 16 | 40 | 68 | 134 |
| பங்களாதேஷ் | 2 | 2 | 4 | 8 |
| பாகிஸ்தான் | 1 | 1 | 2 | 4 |
| மாலைதீவுகள் | 0 | 2 | 10 | 12 |

## றக்பி விளையாட்டின் அளவு பரிமாணங்கள்

| | |
|---|---|
| மைதான நீளம் | - 100 m |
| மைதான அகலம் | - 68.5 m |
| பந்தின் நீளம் | - 28 cm |
| கோல் கம்பத்தின் உயரம் | - 7.52 m |
| பந்தின் அகலச் சுற்றளவு | - 77.2 m |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆவணப்படமாகும் உஸைன் போல்ட் வரலாறு




பிரபல விளையாட்டு வீரர்களின் வாழ்க்கை வரலாறுகள் திரைப்படங்களாக மாறும் நிலையில், தொடர்ந்து மூன்று ஒலிம்பிக் போட்டிகளில் மூன்று மூன்றாக மும்முறை தங்கப் பதக்கங்களைக் குவித்த 'உஸைன் போல்ட்' வாழ்க்கை வரலாறு ஆவணப்படமாக தயாரிக்கப்பட்டு வெளியீட்டுக்காக தயாராகியிருக்கிறது. 'நான் போல்ட்' என பெயரிடப்பட்டிருக்கும் இந்த திரைப்படத்திற்காக அவரது ரசிகர்கள் உலகம் முழுவதும் காத்திருக்கின்றனர்.

உஸைன் போல்ட் எதிர்வரும் 2017 ஆம் ஆண்டு லண்டனில் இடம்பெறவுள்ள சம்பின்ஸிப் போட்டிகளுடன் ஓய்வு பெறவுள்ளார்.

## ஒலிம்பிக் போட்டிகளின் செலவு குறைப்பு

வழமையான ஒலிம்பிக் போட்டிகளுக்கு செலவாகும் பூதாகர செலவைப் பார்த்து கவலையடைந்துள்ள சர்வதேச ஒலிம்பிக் சபை எதிர்வரும் (2020 - டோக்கியோ) போட்டிகளின் செலவைக் குறைப்பதற்காக மூன்று போட்டிகளை நீக்க முடிவு செய்துள்ளது. பெரும்பாலும் டோக்கியோ போட்டிகளுக்கு 30 பில்லியன் செலவாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

## விளையாட்டுக்கள் நடைபெறும் ஆண்டுகள்

- 2019 ஆம் ஆண்டு உலகக் கிண்ணக் கிரிக்கட் போட்டி, இங்கிலாந்தில் நடைபெறும்.
- 2023 ஆம் ஆண்டு உலகக் கிண்ணக் கிரிக்கட் போட்டி, இந்தியாவில் நடைபெறும்.
- 2018 ஆம் ஆண்டு உலக உதைப்பந்தாட்டப் போட்டி ரஷ்யாவில் நடைபெறும்.
- 2022 ஆம் ஆண்டு உலக உதைப்பந்தாட்டப் போட்டி கட்டாரில் நடைபெறும்.

## அகில இலங்கை ரீதியில் சாதனை



சபான் ஜவாஹிர் பயாஸ் முஹம்மட்

அகில இலங்கை ரீதியாக பாடசாலைகளுக்கு இடையில் நடத்தப்பட்ட மெய்வல்லுநர் போட்டிகளில் 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் இரண்டாம் இடத்தை நிக/அபுக்காகம மு.ம.வி. சேர்ந்த மாணவன் சபான் ஜவாஹிர் பெற்று சாதனை படைத்தார்.

நீளம் பாய்தலில் 7.5 மீற்றர் பாய்ந்து கெகுணகொல்ல தே.பா. மாணவன் பயாஸ் முஹம்மட் மூன்றாம் இடத்தைப் பெற்று சாதனை படைத்தார்.

## மின்னல் வேக கோல் புதிய சாதனை



இதுவரையான கால்பந்து வரலாற்றில் மிக வேகமாக கோல் அடிக்கப்பட்ட சம்பவம் பெல்ஜியம் நாட்டு வீரர்களால் அரங்கேறியுள்ளது. ஆட்டம் தொடங்கிய 8.01 வினாடிகளில் பெல்ஜியம் வீரர் பெண்டகீ ஜிப்ரோல்ரர் அணிக்கு எதிராக கோல் அடித்து இந்த சாதனையை நிகழ்த்தியுள்ளார்.


PUBLIC LIBRARY JAFFNA



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைச் சரம்

## இளமை இனிமை அதுவே



இளந்தென்றல் வருடிச் செல்ல
இன்பத்தில் தத்தளிக்கும்
இனிய பருவமது

கருவறை நாட்களிலும்
கள்ளமிலா குழவிப் பருவத்திலும்
அறியாதவை - இளமை பருவத்தில்
அறிவுக் கண்களை திறந்துவிட்டது

இளரத்தம் பாயும் இதயங்கள்
இறை தீனை சுமந்திட
இளமைக் கனவுகள்
இனிதாய் ஜொலித்திட

இளமண்ணில் சரித்திரம் படைத்திட
வீரபுருஷர்களாய் விழித்தெழுவோம்
வாழ்க்கையில் புதுமைகள் படைத்திட
வானளாவ பயணிப்போம்

இளம் மொட்டுக்களின் தியாகப் பயணம்
நாளை ஜன்னாவில்
அர்ஷின் நிழலில்
அல்லாஹ்வின் முன் நிற்கவே...

அஸ்ரா அன்ஸார்
சுனந்தபுர

## சிந்தனை

இம்மானிட உலகில்
உள்ளங்களில் பயமின்றி...
உணர்வுகளில் வலியின்றி...
உன்னை மறந்து கொண்டிருக்கும்
இதயங்கள்...

நிரந்தரமில்லா இவ்வையகத்தில்
நிலைபெறுவோம் என்ற நம்பிக்கையில்
வாழ்ந்து கொண்டிருக்கும் உள்ளங்களில்
உன் அருளை உதிக்கச் செய்து விடு இறைவா

எப்போதும் இன்பங்களை மாத்திரம்
தேடி அலையும் இம்மனித இனத்தை
உன்னைப் பற்றிய சிந்தனையை
மறுமை வரை
நிலைபெறச் செய்து விடு இறைவனே

உஸாமா றெளபர்
கபூரிய்யா அ.க.
மஹரகம

## என்ன நடக்கிறது?




வாழ்க்கை கனவாகிறது
யாக்கை பிணமாகிறது...
உடலுக்குச் சா
உயிருக்கு விசா!

வந்த வேலை மடிந்தது என்று
ஆன்மா தன் பெற்றோர்
தேசம் நோக்கி பயணிக்கிறது!

பயனற்ற உடம்பு மண்ணிற்கு
உணவாகிறது
எனக்கும் உனக்கும்
இதுதான் நடக்கிறது!

எம்.பி. அமல் பஷீர்
பாத்திமா ஸஹ்ரா பெ.அ.க.
ஓட்டமாவடி

## பாதுகாத்துக் கொள்ளுங்கள்



மலைக்குள்ளும் இருப்பேன்
மண்ணுக்குள்ளும் இருப்பேன்
கடலில் கலந்து கொள்வேன்
அலையாய் வந்து செல்வேன்
ககனத்துக் களம் உறைவேன்
கனம் குறைந்து மழையாய் வீழ்வேன்
பரவி எங்கும் செல்வேன்
பாயும் வெள்ளம் ஆவேன்
பானமாக வருவேன்
தாகம் தீர்த்து மகிழ்வேன்
பசுமை கூட்டி வைப்பேன்
பாரை தழைக்கச் செய்வேன்
ஓடியே உதவும் என்மேல்
ஒதுக்கிடும் கழிவைக் கொட்டி
சாக்கடை ஆக்கி நீங்கள்
சாவைத் தேடிக் கொள்ளாதீர்கள்

ஆர்.எம். அஸ்ரிகு
பொ/அல்அஸ்ஹர் ம.வி.
கல்லொளை

## பேசும் கவிதை - இல 19



- படம் சொல்லும் சேதிகளை கவிதையாக எழுதியனுப்பலாம்.
- கவிதைகள் பத்து வரிகளுக்குள் அமைதல் வேண்டும்.
- எழுதி அனுப்பப்படும் கவிதைகள் கவிதைச் சரத்தில் பிரசுரிக்கப்படுவதுடன், தெரிவு செய்யப்படும் சிறந்த முதல் கவிதைக்கு பரிசாக பெறுமதியான புத்தகம் இலவசமாக அனுப்பி வைக்கப்படும்.
- கவிதைகள் தபாலட்டையில் மாத்திரமே எழுதப்படல் வேண்டும்.

**அனுப்ப வேண்டிய இறுதித் திகதி: 2016 நவம்பர் 20**

அனுப்ப வேண்டிய முகவரி:
அகரம் சஞ்சிகை, 77, தெமடகொட வீதி,
கொழும்பு 09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## முதலிடம் பெற்ற கவிதை

### ஆசான்

வெண்கட்டி கொண்டு எழுதுவது
வெறும் எண்ணக் கோடுகளல்ல
அவை...
சமுதாயத்தின் வண்ணக் கீறல்கள்
கற்றுத் தருவது வெறும் பட்டப்படிப்பு
மட்டுமல்ல,
வாழ்க்கையின்
இனிய ராகங்களையும்தான்

**பாத்திமா தஹ்ரா**
**வெலிகம**

### அவர் ஆசிரியர்

எம்மை எமக்கே
அறிமுகம் செய்யும்
ஆளுமை அவர்
அன்பும் அறிவும் கலந்து
எம்மை செதுக்கும்
உன்னத சிற்பி அவர்
ஒரு வஞ்சனையற்ற
ஒளி விளக்காய்
உத்தம உறவாய்
எமது பாதையை
சீர்படுத்தும் செம்மல் அவர்
என் ஆசான்

**ஏ. நுல்ஜிஸா சீனத்**
**இஸ்லாஹிய்ய. அ.க.**
**புத்தளம்**

### பணி

ஆசிரியம்
உன்னத பணி
ஏனெனில்
ஆதமுக்கு கற்றுக் கொடுத்த
அல்லாஹ்வும்
இருளகற்ற வழி காட்டிய
இறைத் தூதர்களும்
ஆசான்களே!
நாளாந்தம் கௌரவிப்போம்

**அஹ்ஸன் ஸாஹிர்**
**தஸ்கர**

### என் தேடலின் விடியல் நீ...!

சிப்பிக்குள் இருக்கும் முத்தைப்போல
எனக்குள் மறைந்து கிடந்த
திறமையை தட்டி எழுப்பிய ஆசானே!
நீ மறைந்தாலும் எனக்குள்
நீ விட்டுச் சென்ற உன்
அறிவு என்னை விட்டு
என்றும் அகலாது

**அ.அ.பா. றஸா**
**பாத்திமா ஸஹ்ரா ம.அ.க.**
**ஓட்டமாவடி**

### ஆசானிடம் ஒரு வேண்டுகோள்

அன்பால் எம்மை அரவணைத்து
அழகிய கல்வியை ஊட்டினீரே!
உலகினில் நாம் உயர
உதவியதும் எமக்கு நீரே!
பண்பு பல எமக்கூட்டி
பாரிற்கு நற்பிரஜையாய் எம்மை
அளித்தீர்கள் கல்விச் சுடராய்
நாம் ஒளி வீசிட காரணமும் நீரே!
நல்ல நிலைக்கு நாம் வந்திட
நல்வழி காட்டிடுவீர் ஆசான்களே!

**ஆர். லிகா**
**நிக/நம்முவாவ மு.ம.வி.**
**நம்முவாவ**

### எம் ஆசிரியர்

பசியோடு வந்த எம்மை
அறிவுப் பசும்பால் ஊட்டி
பண்பாலே பயிற்றுவித்து
அன்பாலே அரியாசனமேற்றி
களிகளை சிலைகளாய்
வடித்தவர்கள் – நீங்கள்
வாழ்நாள் போதாது நாம்
இங்கு பெற்ற கடன் தீர்த்திட
உமக்கு...

**ஏ.எப். நதா**
**பள்ளிக்குடியிருப்பு**
**அக்கரைப்பற்று**

### என் உயிர்

தடைகள் பல தாண்டி
உலக சாதனையாளர்களில்
நானும் ஒருவனாய்
என் நாமத்தையும்
தடம் பதித்திடுவதற்காய்
தன்னம்பிக்கை எனும் பயிரை
என் உள்ளத்தில் ஆழமாய்
விதைத்தவர் என் ஆசான் நீரோ!

**ஹஸ்னா பஹ்லுன்**
**கல்முனைக்குடி**
**ஏத்தாளை**

### அறிவின் சிகரம் என் ஆசிரியை

அன்பு எனும் பாசறைக்குள்
அடிமையாய் விழுந்தோமே!
நீதி எனும் நியாயத்துக்குள்
நிம்மதியாய் திகழ்ந்தோமே!
அன்பின் ஊற்றுக்குள்
தாயாய் அரவணைத்தாயே!
தகுதி, தரம் பார்க்காமல்
தன்மானத்தையே இழந்தாயே!
உறவு எனும் உயிரோட்டத்துக்குள்
உயர்வாய் நின்றாயே!

**சாலிஹ் றிப்கா**
**பாத்திமா ஸஹ்ரா ம.அ.க.**
**ஓட்டமாவடி**

### நல்லாசிகள்

கற்றுத் தரும்
வித்தைக்காக
என்றென்றும்
நன்றி நினைப்போம்
வாழ்வில்
வானுயரப் பறப்போம்...
என் ஆசான்களுக்கு
நல்லாசிகள்
உரித்தாகட்டும்...

**அஸ்மா மஸாஹிம்**
**அல்பஹ்ரியா ம.க.**
**பாணந்துறை**

### தரமிருந்தும் இடம் பிடிக்கத் தவறியவை

எப். அஸ்ரிபா - பாத்திமா ஸஹ்ரா ம.அ.க, ஓட்டமாவடி
எப். நிப்லா - ஆஇஷா மகளிர் க. அக்கரைப்பற்று
எப். ரிஸ்லா - பொலன்னறுவை
எம்.கே.எப். சிபான - நாவின்ன, காலி
எஸ். ரிபான் - பேராறு, கந்தளாய்
எம்.எம்.எப். சுமையா - மருதமுனை
எம்.என்.எப். நப்லா - எருக்கலம்பிட்டி ம.வி, மன்னார்
ஏ.எப். அப்லா - எருக்கலம்பிட்டி ம.வி, மன்னார்
ஸரா ஸுஹூத் - பறகஹதெனிய தே.பா.
ஸாஜிதா - ஓட்டமாவடி 03
எம்.ஆர். சம்ஹரீரா - அல்ஹிக்மா மு.ம.வி, தித்தவல்கால
எப். பானு - பாத்திமா ஸஹ்ரா ம.அ.க, ஓட்டமாவடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உங்களுடைய இலக்கை அடைந்து கொள்வது எப்படி?

கடந்த இதழ் தொடர்....

***ஹனீபா ஏ. வஹாப் (இஸ்லாஹி)***
BA, Dip.in Counseling (NISD), PGD in Psychology

உதாரணமாக: எதிர்வரும் க.பொ.த. (சா/த) பரீட்சையில் நீங்கள் 9A பெறுவதாக உங்களுடைய இலக்கைத் தீர்மானித்தால், அப்பரீட்சையை எழுதுவதற்கு முன்பு ஆயத்தம் செய்ய வேண்டிய விடயங்களாக பின்வரும் விடயங்களைக் குறிப்பிடலாம்.

- பாடத்திட்டத்தை படித்து முடித்தல்
- முழுப் பாடப் பரப்பையும் மீட்டல் செய்தல்
- கடந்த கால வினாக்களுடன் பரிச்சயத்தைப் பெற்றுக் கொள்ளல்
- குறிப்பிட்ட நேரத்துக்குள் பரீட்சை வினாக்களுக்கு விடையளிக்கும் பரிச்சயத்தைப் பெறுதல்

இன்னும் இருக்கும் 2 மாதங்களுள் இந்த நான்கு பிரதான விடயங்களையும் எப்போது, எவ்வளவு காலத்துக்குள் செய்து முடிக்கலாம் என ஒரு திட்டத்தை வரைந்து ஓர் அட்டவணையைத் தயாரித்துக் கொள்ளலாம்.

உதாரணமாக :

**உத்தேச நேர அட்டவணை**

| தொ. இல | விடயம் / காலம் | செப் 4th | ஒக்டோபர் 1st | ஒக்டோபர் 2nd | ஒக்டோபர் 3rd | ஒக்டோபர் 4th | நவம்பர் 1st | நவம்பர் 2nd | நவம்பர் 3rd | நவம்பர் 4th | டிசம்பர் 1st | டிசம்பர் 2nd |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | பாடத்திட்டத்தை படித்து முடித்தல் | ■ | ■ | ■ | | | | | | | | |
| 02 | முழுப் பாடப் பரப்பையும் மீட்டல் செய்தல் | | | ■ | ■ | ■ | ■ | | | | | |
| 03 | கடந்த கால வினாக்களுடன் பரிச்சயத்தைப் பெற்றுக் கொள்ளல் | | | | ■ | ■ | ■ | ■ | ■ | ■ | | |
| 04 | குறிப்பிட்ட நேரத்துக்குள் பரீட்சை வினாக்களுக்கு விடையளிக்கும் பரிச்சயத்தைப் பெறுதல் | | | | | | | | | ■ | ■ | ■ |

இந்த நேர அட்டவணையில் குறிப்பிட்டவாறு குறிப்பிட்ட காலத்துக்குள் குறித்த வேலைகளைக் கச்சிதமாக செய்து முடிப்போம் என்றால் அல்லாஹ்வின் நாட்டத்தோடு நீங்கள் தீர்மானித்த இலக்கை நிச்சயம் அடைந்து கொள்ளலாம். இக்காலப் பகுதியில் இலக்குடன் ஒத்துவராத எந்த நிகழ்ச்சியையும் செய்வதற்கு முனையக் கூடாது என்பதில் கவனமாக இருக்க வேண்டும்.

04. தொடர்ச்சியான மீளாய்வுக்குரிய பொறிமுறையைத் தயாரித்துச் செயற்படுத்தல் (Constant Review Mechanism with Score Board)

திட்டத்துக்கு ஏற்றவாறு எமது செயற்பாடுகள் நகர்கின்றனவா? நாம் எவ்வளவு முயற்சி செய்திருக்கின்றோம்? விளைவாக எவ்வளவு அடைந்திருக்கின்றோம்? என்பதை அடிக்கடி பரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீலிக்க வேண்டும். உதாரணமாக, 9 கிலோ கிராம் உடல் எடையை மூன்று மாதங்களுக்குள் குறைக்க வேண்டும் என்ற குறிக்கோளுடன் ஜிம் சென்டர் ஒன்றுக்கு கிழமைக்கு 5 நாட்கள் செல்லும் ஒருவர் முதலாம் வாரம் முடிந்ததும் உடலின் எடையில் எவ்வளவு குறைந்திருக்கிறது? எஞ்சிய காலத்தினுள் எவ்வளவு குறைக்க வேண்டும்? நாம் மேற்கொள்ளும் உடல் பயிற்சி மற்றும் உணவுக் கட்டுப்பாடு என்பன சரிதானா அல்லது மாற்ற வேண்டுமா? என்பன தொடர்பில் அடிக்கடி பரிசீலித்துப் பார்க்க வேண்டும்.

அதுபோலவே 9A எடுக்கும் நோக்கில் மேலே உள்ளவாறு அட்டவணையைத் தயரித்துக் கொண்ட ஒருவர் அதற்கேற்ப நாம் பணிக்கின்றோமா? வழிமுறையை மாற்ற வேண்டுமா? இப்போது எந்த இடத்தில் இருக்கின்றோம்? இனிமேல் எதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்பன போன்ற விடயங்களைத் தீர்மானிக்க தொடர் மீள்பரிசோதனை அவசியமாகின்றது.

05. உங்களைக் கேள்வி கேட்டுக் கண்காணிக்கும் அல்லது நீங்கள் பதில் கூறக் கடமையான தரத்தில் உள்ள ஒருவரை நியமித்துக் கொள்ளுங்கள்

(Set Your Accountability Structure )

நீங்கள் இவ்வாறெல்லாம் திட்டம் தீட்டினாலும் நண்பர்கள், தொலைபேசி, சமூக ஊடகங்கள், காதல் எனும் வடிவங்களில் உள்ள ஷைத்தான் உங்களை ஒருகை பார்க்கத் துடிப்பான். எனவே, வெளியிலிருந்து உங்களைக் கண்காணித்து பாதை பிசகாமல் உங்களை வழிநடத்தக் கூடிய ஒரு நம்பிக்கையாளரை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். அது உங்களுடைய பெற்றோர், உறவினராகவோ அல்லது உங்களுடைய ஆசான்களாகவோ அல்லது வழிகாட்டியாகவுள்ள வேறு ஒருவராகவோ இருக்கலாம்.

நீங்கள் வரைந்த திட்டத்தை அவர்களிடம் ஒப்படைத்து உங்களுடைய அர்ப்பணிப்பின் மட்டம், அடைவின் மட்டம் என்பன எவ்வாறு உள்ளது என்பதை அவதானித்து வழிகாட்டுமாறு அவர்களிடம் கூறுங்கள். நிச்சயமாக அவர்கள் உங்களுக்கு உதவுவார்கள். வாழ்வில் வெற்றி பெறலாம்.

இத்தகைய திட்டமிடல் படிப்பதற்கு மாத்திரமன்றி ஏனைய எல்லாத் துறைகளுக்கும் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதை மகிழ்ச்சியுடன் கூறிக் கொள்ள விரும்புகின்றேன்.

''தன்னில் தனக்கு அக்கறை இல்லாதவர்கள் மீது பிறர் அக்கறை கொள்ள மாட்டர்கள்'' என்பதை மனதில் வைத்து மேலே சொல்லப்பட்ட விடயங்களை கருத்தூன்றிக் கவனித்து வாழ்வில் கடைப்பிடிக்கு மாறு அன்புக் கட்டளை பிறப்பிக்கின்றேன்.

## சிந்தனைக் கதை

ஒரு காட்டிற்கு இரண்டு மர வெட்டிகள் சென்றனர். மாலை இருவரும் வீடு திரும்பும் போது ஒருவரிடம் அதிக விறகும் அதேநேரம், அவர் அதிக களைப்படையாமலும் இருந்தார். மற்றவருக்கோ பயங்கர ஆச்சரியம். ''நம்மைப் போலத்தானே அவனும்; அவனால் மட்டும் எப்படி இது சாத்தியமானது'' என்று அதிசயித்தான். ஆர்வம் தாங்காமல் அவனிடமே கேட்டு விட்டான்! ''இந்த விறகுகளுக்காக நீ என்ன செய்தாய்?'' என்று! ''இடை விடாமல் வெட்டிக் கொண்டே இருந்தேன்'' என்றதும், ''சிறிதும் ஓய்வு இல்லாமலா?'' என்று கேட்டான் நண்பன். ''ஆம், அதிக விறகுகள் பெற வேண்டுமே...'' ''ஆனால், நீ கொஞ்சமும் களைப்படையாமல் இருப்பது எப்படி?'' என்று கேட்டான்! ''நான் இடையில் அடிக்கடி ஓய்வு எடுத்துக் கொள்வேன்'' என்று சொன்னான் நண்பன்! மறுநாள் அவனும் அதேபோல் ஓய்வு எடுத்து எடுத்து மரம் வெட்டினான். இருப்பினும் அவனால் நண்பன் அளவுக்கு மரம் வெட்ட முடியவில்லை,

மறுநாள் மரம் வெட்டும்போது ஒளிந்திருந்து பார்க்க வேண்டும் என்று திட்டமிட்டு வீடு திரும்பினான். மறுநாள் மரம் வெட்ட பிரிந்து சென்ற பின், அவன் நண்பனை பின் தொடர்ந்து சென்றான். நண்பனும் அரை மணி நேரம் மரம் வெட்டி விட்டு ஓய்வாக அமர்ந்தான். ஆனால், அவன் ஓய்வு நேரத்தில் அவனது கோடாலியை தீட்டிக் கொண்டிருந்தான்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்றலின் முதற்படி



கற்றலின் முதற்படியாக நினைவாற்றல் விளங்குகின்றது. எவ்வளவுதான் தெளிவாக உணர்ந்து கற்றாலும் அதனை நினைவில் வைத்துக் கொள்வது அவசியமாகும். ஆனால், இன்று நாம் உரிய அளவு நினைவாற்றல் இன்மையால் அவதியுறுகிறோம்.

- நினைவாற்றலை விருத்தி செய்ய முதல் யுக்தி கருத்தை உணர்ந்து கற்றலாகும். வெறும் வார்த்தைகளை மாத்திரம் மனனம் செய்வதால் கற்றவை மனதில் தங்கி விடாது. எவ்வாறு 'சித்திரம் கைப்பழக்கம்; செந்தமிழ் நாப்பழக்கம்' என்பார்களோ அவ்வாறே நினைவாற்றல் என்பது பொருளுணர்ந்து கற்றலாகும்.
- கவனச் சிதறலை முடியுமான அளவு கட்டுப் படுத்தல் நினைவாற்றலை விருத்தி செய்ய உதவும் இன்னொரு வழிமுறையாகும். ஏக காலத்தில் பல திசைகளில் கவனத்தை செலவழிக்காது ஒரு நேரத்தில் ஒரு வேலையில் மாத்திரம் ஈடுபடுவது கற்றலை நினைவில் நிற்க உறுதுணையாக அமையும்.
- உடலுக்குத் தேவையான உடற்பயிற்சியை வழங் கும் நாம் மூளைக்குத் தேவையான பயிற்சியை வழங்குவது பற்றி சிந்திப்பதேயில்லை. ஆனால், அந்த மூளை நாம் விரும்பியவாறெல்லாம் செயற்பட வேண்டும் என நிர்ப்பந்திக்கிறோம். இது இராணுவ வீரர்களுக்கு பயிற்சி வழங்காமல் போர்க்களத்திற்கு அனுப்புவது போன்றாகும்.

எனவே, புதிர் கணக்குகள், அர்த்தமுள்ள வாசிப்பு, மூளை விருத்தி பயிற்சிகள் போன்றவற்றை நாம் தொடர்ச்சியாக செய்ய வேண்டும். வழமையான பாணியில் சிந்திப்பதை தவிர்த்து வித்தியாசமான கோணங்களிலும் நாம் சிந்திக்க பழக வேண்டும்.

- சுவர் இருந்தால்தான் சித்திரம் வரையலாம் என் பது ஆன்றோர் வாக்கு! அதேபோல, உடலுக்குத் தேவையான ஊட்டச் சத்துக்களை வழங்குவதில் நாம் அதீத கவனத்தைச் செலுத்த வேண்டும். வெறும் பார்வைக்கும் நாவுக்கும் மாத்திரம் அடிமைப்பட்டு சக்கை உணவுகளுடன் சுருங்கி விடாமல் கீரை வகைகள், நிறை உணவுகள், போசணைப் பதார்த்தங்களையும் நாம் உண்ணப் பழக வேண்டும்.
- நாளாந்தம் புதிய புதிய விடயங்களை கற்றுக் கொள்ள வேண்டும். மூளையை பழைய பரணாக தூசு படிய விடக் கூடாது. வரலாறுகள், கண்டு பிடிப்புக்கள், தத்துவங்கள், அறிஞர்களின் சரிதை என எமது வாசிப்புக்கு சிறகுகளை வழங்கி உயரப் பறக்க சுதந்திரம் வழங்க வேண்டும்.
- ''இறை நியதியை விலகி எதுவும் நடப்பதில்லை. அவன் நினைத்தால் நடக்காதது எதுவுமில்லை.'' நல்ல நினைவாற்றலைத் தருமாறு அல்லாஹ் விடம் இறைஞ்சும்போது நிச்சயம் அவன் மறுக்கப் போவதில்லை.

அதேபோல, குர்ஆன் மிகப் பெரும் நினைவாற்ற லுக்கான ஔடதமாகும். அதை ஓத ஓத உள்ளத்துக் கசடுகள் அகன்று உள்ளம் தூய்மையடைகிறது. ஆகவே, குர்ஆனிய ஒளியால் நினைவாற்றலை அதி கரித்துக் கொள்வோம்.

***எம். நிஸ்மிஹார் நஸீர் (நளீமி)***
***அஷ்ஷபா முஸ்லிம் ம.வி.***
***வத்தேகெதர***




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணங்களின் வண்ணங்கள் - 15

## தலைப்பு: சிறுவர் தின கொண்டாட்டம்

### பரிசில்களை பெறும் சித்திரங்கள்



ஆர்.ஏ. ரஸ்ஸாக்
க/அம்மனார் தே.பா.
ஹந்தஸ்ஸ




எச். நுபைல்
தி/மூதூர் மத்திய க. (தே.பா.)
மூதூர் - 06



கே.டீ.எப். சிபானா
குளி/மடிகே மிதியால ம.க.


### பாராட்டை பெறும் சித்திரங்கள்




இஸ்கன் இப்ராஹிம்
முள்ளிபுரம்
புத்தளம்



மிஸ்பாக்
தி/மூதூர் மத்திய க. (தே.பா.)
மூதூர் - 06




எம்.என்.எம். ஆசிக்
வெலம்பொட மு.ம.வி.



எம்.கே. அப்ரினா
மன்/எருக்கலம்பிட்டி மு.ம.வி.
மன்னார்



ஏ.எப். இஸாமா
மன்/எருக்கலம்பிட்டி மு.ம.வி.
மன்னார்



எஸ்.எப். சம்ஹறா
மன்/எருக்கலம்பிட்டி மு.ம.வி.
மன்னார்



எம்.எம். பாத்திமா ஹயாம்
மட்/மீரா பெண்கள் தே.பா.
காத்தான்குடி




எம்.எஸ்.எப். சஆமா
குளி/அல்பலாஹ் ஆ.பா.
மடிகே மிதியால



ஜே. அஸ்ரா
மன்/எருக்கலம்பிட்டி மு.ம.வி.
மன்னார்



ஏ. அஸ்னா
மன்/எருக்கலம்பிட்டி மு.ம.வி.
மன்னார்



எஸ்.எம். பயாஸ்
கு/பறகஹதெனிய தே.பா.
குருணாகல்




இப்ராஹிம் இஸ்ஹாம்
முள்ளிபுரம்
புத்தளம்

PUBLIC LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைநகரில் தலைநிமிர்ந்து நிற்கும் மாபெரும் புத்தக நிலையம்

# இஸ்லாமிக் புக் ஹவுஸ்



அறிவுக் களஞ்சியத்தின் நுழைவாயில்

ஒரே கூரையின் கீழ்

தமிழ், ஆங்கிலம், சிங்களம், அரபு மொழிகளில்...

- புனித அல்குர்ஆன்
- அகராதிகள்
- உளவியல்
- தர்ஜமாக்கள்
- கதைப் புத்தகங்கள்
- சமையல் புத்தகங்கள்
- இஸ்லாம்
- அல் ஹதீஸ்
- வரலாறு
- இலக்கியம்
- இலக்கணம்
- கவிதை
- பாடசாலை நூல்கள்
- பாடசாலை உபகரணங்கள்
- VCD/ DVD







தினமும் காலை 8.00 மணியிலிருந்து இரவு 10.00 மணிவரை உங்களுக்காகத் திறந்திருக்கும்...

வெளியீடு மொத்த விற்பனைப் பகுதி:
0115 736098, 0772518641

தபால் மூலம் நூல்களைப் பெற:
011 2684851

புனித அல்குர்ஆன் பிரதிகளை மொத்தமாகப் பெற: 0773171725

புதிய நூல்களின் தகவல்கள் அறிய f<space>ibhbooks எனType செய்து 40404க்கு அனுப்புங்கள்.

Now Available
Free Home Delivery
(Within City Limits)
Contact: 0115 925 935



eZ Cash
MasterCard
VISA
AMERICAN EXPRESS
Accepted

77, தெமடகொட வீதி, கொழும்பு-9

HOTLINE: 0115 925 935

Printed by IPC Printers (Just Media Foundation)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org